[illegible]

8 4

12-10-1935


72
N35.8.4
208732

ரு 3 Regd. No. M. [illegible]



# மாத்வ மித்திரன்.

# THE MADWA MITRAN.


EDITOR:

**Adyam Bhagavatha Ranganathachariar,**
**KUMBAKONAM.**


பௌர்ணமிதோறும் வெளிவரும்.


| | | |
|---|---|---|
| **Vol 8.** | யுவஸம்வத்ஸரம் | **No. 4.** |
| புஸ்தகம் 8. | ஆசுவீஜ மாஸம். (12—10—35 சனிவாரம்.) | நெ. 4. |



| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | தாத்பரிய நிர்ணயம். (ஸ்ரீமத்வாசாரியார்) | 89 |
| 2. | ஆசாரமாலை | 97 |
| 3. | ஸ்ரீமத்வவிஜயம் | 100 |
| 4 | அப்பைய்ய தீக்ஷிதரின் அதிக்ஷேபணைகளுக்கு கண்டனம் | 105 |
| 5. | முக்ய மாத்வ மடாதிபதிகள் நேரில் சந்தித்தல் | 109 |
| 6. | ஸ்ரீவியாஸராஜமடம் ஸ்வாமிகளின் ஆசிரமம் | 111 |
| 7. | சந்தாதாரர்களுக்கு ஓர் விக்ஞாபனம் | 112 |
| 8. | தவணைவிலைச் சீட்டு | 113 |
| 9 | பாகவத அத்யாத்ம குறிப்பு | 114 |
| 10. | ராமாயண அத்யாத்ம குறிப்பு | 115 |
| 11. | சங்கிலை விபரம் | 117 |
| 12. | செய்தித்திரட்டு | 118 |
| 13 | ஸத்ராயாகம், மதிப்புரை | 119 |
| 14. | விசேஷதினங்கள் | 120 |



ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

## விற்பனையாகிவிட்டது.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே. ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாசாந்தியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வால்யங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

## மாத்வமித்திரன் பழைய வால்யங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

21 OCT 1935

ஸ்ரீலக்ஷ்மிநரஸிம்ஹாயநம.

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்

### இருபத்தி இரண்டாவது அத்தியாயம்.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்காசாரியாரின் மொழி பெயர்ப்பு).

(முன் 72ம் பக்கம் தொடர்ச்சி)

பிறகு தர்மபுத்திரர் கலியின்மீது யுத்தத்தை அறிவிக்கும் சகுனங்களைப் பார்த்து சங்கடமடைந்த புத்தியுள்ளவராய் பீமசேனர் எங்கே என்று துரௌபதியைக் கேட்டார். துரௌபதியின் வாயினின்றும் பீமசேனர் ஸௌகந்திகத் தாமரைகளைக் கொண்டுவரப்போயிருப்பதாய் கேட்டு தர்மபுத்திரர், பாரியாளான துரௌபதியுடனும், தம்பிமார்களுடனும், ரிஷிகளுடனும் சேர்ந்து கடோத்கசன் முதலான ராக்ஷஸ சிரேஷ்டர்களின் மீது ஏறிக்கொண்டு, பீமசேனர் இருந்துவரும் குளத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்த பீமசேனரைப் பார்த்து குபேரனின் நண்பரான பரமசிவனின் கோபம் எங்குவந்து சேருமோ என்று பயப்பட்டு நீ இவ்வாறு துணிச்சல் செய்யாதே என்று சொன்னார். அப்பொழுது க்ரோதவசர்களென்னும் ராக்ஷஸர்கள் குபேரனின் ஆக்ஞையின்பேரில் குபேரனின் அந்த ஸௌகந்திகத் தாமரை தடாகத்தை ஸம்ரக்ஷித்தனர். அவர்களுக்கு தேவர்

208732

ளால்தான் மரணமும் உண்டு. ஆயினும் குபேரனுக்கு ஆக வளிப்பவர் பரமசிவனாதலால் அந்த தைரியத்தைக்கொண்டு, அவர்கள் பயமற்றிருந்தனர். குபேரன் க்ரோதவசர்கள் கொல்லப்பட்டதைக் கேட்டும் பீமசேனரின் மாகாத்மியத்தை அறிந்து அவரிடம் கோபிக்கவில்லை. அந்த கந்தமாதன பர்வதத்தில் பாண்டவர்கள் வசிக்கும்பொழுது சில நாள் கழித்து துரௌபதி மனுஷ்யர்களால் போகமுடியாததாயுள்ள குபேரனின் அந்தப்புரத்து குளத்தினின்றும் காற்றில் கொண்டுவரப்பட்ட பஞ்ச வர்ணமுள்ள தாமரைகளைப் பார்த்துவிட்டு, பீமசேனருக்கு மீண்டும் கீர்த்தியும், தர்மங்களும் விருத்தியடைவதற்காக இவ்வாறு பேசினார். இந்த பர்வதம் குபேரனால் ஸம்ரக்ஷிக்கப்பட்டதாயுள்ளது. எல்லா ஜனங்களாலும் போகமுடியாதது. ஆதலால் நீர்தான் எல்லா ராக்ஷஸர்களையும் ஸம்ஹாரம் செய்துவிட்டு அங்கு போகவேண்டும்; என்றிவ்வாறு துரௌபதியால் சொல்லப்பட்டவராய் ஒருவராலும் பராஜயமடையாத உத்தம பலமுள்ளவரான பீமசேனர் கதாயுதம் தரித்தவராய் தனுர்பாணங்களைக்கொண்டவராய் கந்தமாதனம் என்னும் மலையின்மீதேறினார். இந்த மலையில் வந்து சேர்ந்த வாயுபுத்ரரான பீமசேனரைப்பார்த்து கர்விஷ்டர்களான ராக்ஷஸர்களின் மூன்று பத்மம் கணக்குள்ள சைனியம், பரமசிவனின் வரத்தால் ஜயிக்கமாளாதவனும் க்ரூரனுமான மணிமந்தனென்ற அஸுரனை முன்னிட்டுக்கொண்டு பலவகையான ஆயுதங்களையும் அஸ்திரங்களையும் விருஷ்டி செய்துகொண்டு பீமசேனரைத் தடுத்தது. பீமசேனர் அந்தக்ஷணமே உத்தமமான பாண ஸமூகங்களால் மணிமந்தனுடன் சேர்ந்த எல்லா ராக்ஷஸ சமூகங்களையும் ஸம்ஹாரம் செய்தார். பீமசேனர் மகா பலசாலியானதால் கொல்லமுடியாதவர்களான மிச்சம் மீதியுள்ள எல்லா ராக்ஷஸர்களையும் ஸம்ஹாரம் செய்துவிட்டு அந்த கந்தமாதன மலையின் சிகரத்தின்மீது நின்றார். அப்படி பீமசேனரால் கொல்லப்பட்ட அந்தக் க்ரோதவசர்களான ராக்ஷஸர்களெல்லோரும் அந்தம் தமஸ்ஸை அடைந்தனர். ஸௌகந்திக வனத்தில் கொல்லப்பட்டுபோன அந்த மணிமந்தன் என்ற அசுரன் மீண்டும் கலியுகத்தில் சங்கராசாரி



யாரென்று பிறந்து ஜனங்களில் மித்யாக்ஞானத்தை, அதாவது பொய்யறிவைப் பரப்பிவிட்டு, அவனுடைய யோக்யதைக்குத் தகுந்தபடி அதிகமான துக்கமுள்ள தமஸ்ஸை அடைந்தான். பிறகு ராஜாவான குபேரன் தன்னுடைய யாராலும் கொல்லப்படமுடியாததான மூன்று மகா பத்மம் ராக்ஷஸ சைனியமும் ஸ்நேகிதனை மணிமந்தனும் பீமசேனரால் கொல்லப்பட்டுப் போகவும் பீமசேனருடன் யுத்தம் செய்ய திவ்யமான ரதத்தை ஏறினான். அஸுராவேசத்தால் குபேரனுக்கு பீமசேனரிடம் மிக்க கோபம் உண்டாயிற்று. அதனால் அவன் பீமசேனருடன் சுயம் யுத்தம் செய்யவந்தான். தர்மபுத்திரர் அச்சமயம் பீமசேனரின் ஸிம்ஹநாதத்தைக்கேட்டு துரௌபதியை துரிதமாய் பீமசேனர் எங்கே என்று ப்ரச்னம் செய்தார். துரௌபதி சொன்ன சமாசாரத்தைக் கேட்டு ராக்ஷஸர்களின் தோளின் மீதேறிக்கொண்டு பீமசேனர் இருந்த இடம் வந்து சேர்ந்தார். தம்பிமார்களுடனும் ரிஷிகளுடனும் துரௌபதியோடும் சேர்ந்து தர்மபுத்திரர் அங்குவந்து சேரவும் குபேரன் பீமசேனரையும் தர்மபுத்திரரையும் தரிசித்தபின் சிறிது அசுராவேசத்தால் விடுபட்டான். சிறிது ஸ்நேகத்தையும் கொண்டான். ராஜராஜனை குபேரன் சிறிது அசுராவேசம் கொண்டிருந்ததால் கதாயுதம் தரித்திருந்த பீமசேனரைப்பார்த்தும் அவரை மரியாதை செய்யவில்லை. தன் ஸ்நேகிதனை மணிமான் இறந்துபோனதற்கு முன்பு அகஸ்தியமாமுனிவர் தனக்கு கொடுத்திருந்த சாபத்தைக் காரணமாய் சொன்னானேயல்லாது பீமசேனரின் ஸாமர்த்தியத்தைக் காரணமாய்ச் சொல்லவில்லை. பிறகு ஸம்பூர்ணமாய் அஸுராவேசம் போன குபேரன் சுத்தமான ஸ்வபாவமுள்ளவனாய் பீமசேனரின் சாமர்த்தியத்தைப்பார்த்து சந்தோஷமடைந்து பாண்டவர்கள் வசிக்க தன் வீட்டையே கொடுத்தான். பாண்டவர்கள் குபேரனின் வீட்டிலேயும் இதர தேவர்களின் வீடுகளிலேயும் வாசம் செய்தனர். மகாத்மர்களான பாண்டவர்கள் குபேரனின் வீட்டிலேயே வாசம் செய்துகொண்டு ஆனந்தமுள்ளவர்களாய் நான்கு வருஷ காலத்தைக் கழித்தபிறகு, இந்திரபகவான் அர்ஜுனனுக்கு ஐந்து வருஷ காலம் மகாஸ்திரங்

களை உபதேசம் செய்தபின் குருதக்ஷிணையாய் தமக்கு என்ன கொடுக்கவேண்டுமென்று மகனான அர்ஜுனன் இந்திரனை ப்ரச்னம் செய்தான். இந்திரபகவான் தன் ஸ்வரூபனான அர்ஜுனனை தனக்கு சத்ருக்களான நிவாதகவசர்களென்னும் ராக்ஷஸர்களைக்கொல்வதைக் குருதக்ஷிணையாகக் கேட்டார். இந்த நிவாதகவசர்களுக்கு தேவர்கள், தைத்யர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள் இவர்களால் கொல்லமுடியாதிருக்கும் வரனை ப்ரம்மா கொடுத்தார். இவ்வாறு வரனைக்கொடுத்தபின் ப்ரம்மா இந்திரனால் ப்ரார்த்திக்கப்பட்டவராய் நீ மனுஷ்ய ரூபமெடுத்து இவர்களைக் கொல்வாய் என்று சொன்னார். அர்ஜுனன் மாதலி என்ற ஸாரதியுடன் சேர்ந்து இந்திரனின் ரதத்தில் ஏறிக்கொண்டு காண்டீவதனுஸ்ஸை எடுத்துக்கொண்டு, அந்த மகா அஸுரர்களைக் கொல்ல புறப்பட்டான். தேவர்கள் அர்ஜுனனுக்கு சங்கத்தைக் கொடுத்தனர். அந்த சங்க சிரேஷ்டத்திற்கு தேவதத்தமென்று பெயர் ஏற்பட்டது. இந்திர புத்திரனான அர்ஜுனன் அந்த சங்க சப்தத்தால் திக்குகளில் ப்ரதித்வனியை உண்டாக்கிக்கொண்டு மஹத்தான தனுஸ்ஸை டங்காரம் செய்துகொண்டு இந்திரன் கொடுத்த மிக்கப்ரகாசமான திவ்யமான கர்ணகுண்டலங்களை தரித்து அந்த அசுரர்களின் நகரத்திற்கு வந்தான். அர்ஜுனனின் சங்கத்வனியையும் காண்டீவத்தின் டங்கார சப்தத்தையும் கேட்டு மகா வீரியவான்களான நிவாதகவசர்களென்னும் அசுரர்கள் யுத்தத்திற்கு எதிர்கொண்டு வந்தனர். பிரம்மாவின் வரத்தால் கர்விஷ்டர்களான அந்த மூன்று கோடி அஸுரர்கள் ஒன்று சேர்ந்து யுத்தத்தில் பலவகை ஆயுதங்களால் அர்ஜுனனின்மீது வர்ஷம் செய்தனர். கிரீடத்தால் பிரகாசிப்பவனும் வீரனுமுள்ள அர்ஜுனன் நிவாதகவசர்களின் ஆயுதங்களை காண்டீவதனுஸ்ஸினின்றும் விடுபட்ட பாணங்களால் தடுத்து மகாஸ்திரங்களின் சிக்ஷையாலும் சரீரபலத்தாலும் விடுபட்ட பாணங்களால் அவர்களின் சிரஸ்ஸுக்களை சேதித்தான். மகாரதிகனான அர்ஜுனனால் எல்லா நிவாதகவசர்களும் கொல்லப்பட்டு போயினர். அர்ஜுனன் அப்படியே பிறகு நிவாதகவசர்களைவிட வேறானவர்களான மகாரதிகர்களான பௌலோம



கணர்களென்றும் காலகேயகணர்களென்றும் பெயர்கொண்ட அறுபதினாயிரம் தைத்யர்களிடம் யுத்தத்திற்கு வந்து சேர்ந்தான். அஸ்திர சஸ்திரங்களை விருஷ்டி செய்யும் அந்த தைத்யர்களை அர்ஜுனன் பாசுபதாஸ்திரத்தால் சீக்கிரமே ஸம்ஹாரம் செய்து மறுபடியும் இந்திரலோகத்திற்குப்போய் சேர்ந்தான். இந்திரபகவான் அவனிடம் மகிழ்ந்தவராய் அர்ஜுனனை ஆலிங்கனம் செய்துகொண்டார். தேவர்களின் த்வேஷிகளான நிவாதகவசர்கள் பௌலோமர்கள், காலகேயர்கள் ஆகிய எல்லா அசுரர்களும் அந்தம்தமஸ்ஸுக்குப் போனார்கள். பிறகு இந்திரபுத்திரனான அர்ஜுனன் இந்திரபகவானின் அனுமதிபெற்று பிரகாசிக்கும் இந்திரரதத்துடன் சகோதரர்களின் சமீபம் வந்து சேர்ந்தான். வந்து சேரும் அர்ஜுனனைப்பார்த்து சகோதரர்கள் மிகவும் சந்தோஷப்பட்டனர். அர்ஜுனன் வந்தபின் மறுபடியும் பாண்டவர்கள் நான்கு வர்ஷ காலம் மேரு பர்வதத்தில் வாசம் செய்தனர். பகவத் கதைகளாலும், பகவத் த்யானம் பூஜைகளாலும் ஸ்ரீமகாவிஷ்ணுவிடம் ஈடுபட்ட மனதுள்ளவர்களான பாண்டவர்களுக்கு பத்து வருஷகாலம் வனவாசத்தில் கழிந்தது.

## நஹுஷோபாக்யானம்.

சத்ருக்களைக் கொல்லாமலும், மகா கீர்த்தியை ஸம்பாதிக்காமலும் சுருதிஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட கர்மங்களை அனுஷ்டித்தலாகிய பகவானுடைய ஆக்ஞையை நிறைவேற்றாமலும், அரசர்களுக்கு உத்தம கதி ஏற்படாது. ப்ராம்மணன், வைசியன், சூத்திரன் இவர்களுக்கு, வெளியேயுள்ள சத்ருக்களிடம் க்ஷமை செய்வது அநேகமாய் தர்மமாகும். ஆந்தரமான அதாவது உள்ளுக்குள்ளே இருந்துவரும் சத்ருக்களான காமக்ரோதாதிகளிடம் இவர்கள் க்ஷமை செய்பலாகாது. வேனராஜனிடம் ரிஷிகள் க்ஷமை செய்யாதிருந்ததால் அநேகமாய் அவர்களுக்கு தர்மமென்று சொல்லப்பட்டது. பகவானுடைய ஆக்ஞைபின்படி நடப்பது எல்லா ஜனங்களுக்கு தர்மமாகும். இவ்வாறு பீமசேனர் சொன்னவார்த்தையைக்கேட்டு, தர்மபுத்திரர் தம்பிகளோடும், திரௌபதியோடும் சேர்ந்து ராக்ஷஸர்களின் தோளின்மீதேறிக்கொண்டு

மீண்டும் திரும்பிப்போய் ஹிமவத்கிரிக்கு தெற்கே வந்து சேர்ந்தார். ஹிமவத்கிரிக்கு தெற்கேயுள்ள சிறு மலைகளில் பாண்டவர்கள் வசித்துவரும்பொழுது, ஒரு சமயம் பீமசேனர் தனுஸ்ஸை எடுத்துக்கொண்டு மிருகங்களை விரட்டிக்கொண்டு பெரிதான மலைப்பாம்பு ரூபத்துடனுள்ள ஆயுராஜனின் மகனான நஹூஷராஜனை அணுகினார். நஹூஷராஜனுக்கு மலைப்பாம்பு ரூபம் வந்ததற்கு காரணமாவது முன்பு சசீபதியான இந்திரபகவான் விருத்ராஸுரனைக்கொன்றதால், அவர் பிரம்மஹத்யைக்கு பயந்து தாமரைத் தண்டிற்குள்ளேயிருந்து வரும் நூலில் சூக்ஷ்ம ரூபத்துடன் இருந்துவிடவும், தேவர்கள் மூவுலகமும் ராஜனில்லாமல் போய்விட்டதே என்று யோசித்து ஆயுராஜனின் மகனான நஹூஷராஜனுக்கு அவனுடைய கண்ணிற்படும் எல்லா ஜனங்களின் தபஸ்ஸும், பலமும் ஏற்படும்படி வரனைக்கொடுத்து அந்த நஹூஷ ராஜனை மூவுலகிற்கும் அரசனாய்ச் செய்தார்கள். அந்த நஹூஷராஜன் எல்லா தேவர்களுடையவும், ரிஷிகளுடையவும், எப்பவும் அழியாததான தபஸ்ஸையும், பலத்தையும் பெற்று எப்பொழுதும் விருத்தியடைந்திருக்கும், நான் இந்திரன் என்ற அகங்காரமுள்ளவனாய் இந்திரனின் பாரியாளான சசீதேவியை ரமணம் செய்ய அபேக்ஷித்தான். இந்திரபகவான் சொன்ன வார்த்தையின்படி சசீதேவி நஹூஷராஜனை வஞ்சிப்பதற்காக ரிஷிக்கூட்டங்களை பல்லக்குத்தூக்கும் போகிகளாய்ச் செய்து கொண்டு அந்தப்பல்லக்கில் உட்கார்ந்து என் வீட்டிற்கு வாருங்கள் என்று சொன்னாள். அவ்வாறே அந்த நஹூஷராஜன் அகஸ்தியர் முதலான ரிஷிகளை பல்லக்குத் தூக்கும் போகிகளாய்ச் செய்துகொண்டான். பல்லக்கைத் தூக்கிக்கொண்டிருந்த மகாத்மாவான அகஸ்தியர் சசீதேவியை ரமணம் செய்வதைத் தடுப்பதற்காக நஹூஷராஜனைப்பார்த்து வேதம் ப்ரமாணமா இல்லையா என்று பிரசினம் செய்தார். நஹூஷராஜன் புத்தி மோசம்போய் வேதம் பிரமாணமன்று என்று சொன்னான். அகஸ்தியர் வேதம் பிரமாணமென்று நிரூபிக்கவும் நஹூஷராஜன் அகஸ்தியரை அவருடைய சிரஸ்ஸில் தன் காலால் உதைத்தான். அச்சமயம் அகஸ்தியரின் ஜடையில் மறைந்து எப்பொழு



தும் நஹூஷராஜனின் கண்ணிற்படாமல் பதுங்கியிருந்த பிருகுரிஷியை ப்ரம்மா பிரவேசம் செய்த நஹூஷராஜனுக்கு இவ்வாறு சாபம் கொடுத்தார். ஹே பாபியே! நீ சீக்கிரம் மலைப்பாம்பின் சரீரத்தை அடைவாய். எட்டு முகூர்த்தங்கள் கொண்டதாயுள்ள ஓர் பகலின் ஆறாவது முகூர்த்தத்தில் உன்னால் அடையப்பெறும் மனுஷ்யன் உன்னைவிட பலத்தில் மேற்பட்டவனாயினும் மலைப்பாம்பாயிருக்கும் உனக்கு சுவாதீனமாகட்டும். நீ கிரஹித்த மனுஷ்யனை எப்பொழுது நீ கொல்லமுடியப்போவதில்லையோ, உன்னால் கிரஹிக்கப்பட்ட மனுஷ்யன் சாமர்த்தியம் இருந்தும் தன்னை தப்புவித்துக்கொள்வதில்லையோ, அப்பொழுது அந்த புருஷனுக்கு உன் தபஸ்ஸும் உத்தமமான பலமும் வந்து சேரட்டும் ஸமஸ்த தேவர்களுடையவும், ரிஷிச்ரேஷ்டர்களுடையவும் எந்த தபஸ்ஸு உன்னிடம் வந்து சேர்ந்திருக்கிறதோ அதெல்லாமே அந்த மனுஷ்யனுக்குப்போய் சேரட்டும். இதில் யோசனை செய்யத்தகுந்தது ஒன்றுமில்லை. நீ செய்யும் ப்ரச்னங்களை எப்பொழுது ஓர் மனிதன் பதில் சொல்லி சமாதானம் செய்கிறானோ அப்பொழுது நீ உன் மலைப்பாம்பு தேகத்தை விட்டு ஸ்வர்க்கத்தை அடையப்போகிறாய். என் அனுக்ரஹத்தால் உனக்கு எப்பொழுதும் முந்தின பிறப்பின் ஞாபகம் இருக்கப்போகிறது. என்றிவ்வாறு பிருகுரிஷியிடம் ப்ரவேசித்திருந்த சதுர்முகன் சாபம் கொடுக்கவும், நஹூஷராஜன் மறு நிமிஷமே மலைப்பாம்பாய் பூமியில் விழுந்தான். இந்திரபகவான் விஷ்ணுவின் உத்தேசமாய் அசுவமேத யாகம் செய்து பாபம் இல்லாமல் செய்துகொண்டு தன் ஸ்தானத்தை அடைந்தார். சசீபதியான இந்திரபகவானுக்கு விருத்ராஸுர சம்ஹார ரூபமான பாபம் தர்ம விருத்திக்குக் காரணமாயிற்று. மூன்று லோகத்திற்கும் ஸம்ரக்ஷகராயுள்ள இந்திரபகவானுக்கு விருத்திராஸுரனைக்கொன்று உலகத்தை ஸம்ரக்ஷிப்பது பாபமன்று. இந்திரன் விருத்ராஸுரனைக்கொன்று மகேந்திரன் ஆனான். என்று வேதவாக்யம் இருந்துவருகிறது. சில இடங்களில் பாபச்செயல் தெளிவாய் புண்ய விருத்திக்குக் காரணமாகிறது. இந்திரபகவானுக்கு ப்ராம்மணனான விருத்ராஸுரனைக்கொன்ற

பாபம் தர்மவிருத்திக்குக் காரணமாயிற்று. இவ்வாறேதான் தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும் பாபகாரியம் புண்யமாகிறது. ஆனால் மனுஷ்யர்களுக்கு பாபம் புண்யமாகாது. என்றால் பாபம் பாபம்தான். புண்யம் புண்யம்தான். அஸுரர்களுக்கோ புண்யம் பாபமாகிறது. இவ்வாறுதான் ஸ்காந்தபுராணவசனம் காணப்படுகிறது. ஆகையால் இந்திரபகவானுக்கு விருத்ராஸுரனைக் கொன்றது பாபமில்லை. ஓர் தேவதை மற்றொரு தேவதையின் பதத்தை அடைவதில்லை. இது யமாதி தேவர்களுக்கு முக்யமான தர்மம். ஆகையால் யமாதி தேவர்கள் ஸ்வர்க்கத்தை ஆள சக்தியுள்ளவர்களாயினும், தாம் அதைப்பெறாமல் நஹுஷராஜனை இந்திரபதவியில் ஸ்தாபித்தார். அந்த நஹுஷன் ப்ரம்மாவின் சாபத்தால் மலைப்பாம்பாய் விழுந்துவிட்டபின் பீமஸேனர் அவனுடைய தபஸ்ஸை அபகரித்துவிட அபேக்ஷித்து, அவன் தன்னை கிரஹிப்பான் என்று தெரிந்துகொண்டே இருபத்தி எட்டாவது யுகத்தில் அந்த மலைப்பாம்பிடம் வந்து சேர்ந்தார். எல்லா தேவர்களுடையவும் ரிஷிகளுடையவும் எந்த தபஸ் அவனிடம் இருந்துவந்ததோ, அதை எல்லாம் கிரகிக்கும் இச்சையின்பேரில் பீமஸேனர் அந்த மலைப்பாம்பின் வசமானவர்போல் ஆனார். மனுஷ்யர்களில் பிறப்பெடுத்த தேவர்களுக்கு அவர்களின் மூலரூபத்தின் பலம் சிறிதுதான் வெளியாகும். வாயுபகவானுக்கு மட்டில் அவர் இச்சித்தால் மூலரூபத்தின் பலம் ஸம்பூர்ணமாய் வெளியாகும். வாயுபகவானைத் தவிர வேறு தேவதைகளுக்கு அவர்களின் இச்சைப்படி அவை வெளியாவதென்பது இல்லை. பகவான் நாராயணனுடைய குணமோ தேசம் காலம் அவதாரம் இவைகளில் எப்பொழுதுமே வியக்தமாயிருக்கிறது. இது சாஸ்திரங்களில் ஏற்பட்ட நிர்ணயமாகும். தேவர்களுக்கு மனுஷ்யாதி ஜன்மத்தில் மூலரூபத்தின் பலாதிகளை ஏற்றுக்கொள்ளும் சக்தியிருப்பினும் அந்த பலாதிகளை வ்யக்தப்படுத்தாமலிருப்பதால் அது அவர்களுக்கு தர்மவிருத்தியாகிறது. அப்பேர்பட்ட தேவர்களிடம் பகவான் ஸ்ரீவிஷ்ணு சந்தோஷமடைகிறார். ஆகையால் பீமஸேனரின் மனுஷ்யாவதாரத்தின் பலம் நஹுஷராஜனுக்கு ப்ரம்மா கொடுத்திருந்த வரத்தால் தடைபட்டதுபோலானபிறகும் கூட பீமஸேனர் தன் இச்சையின் பேரில் தன் மூலரூபத்தின் பலத்தை வெளிப்படுத்தவில்லை.

(தொடரும்).

# ஆசாரமாலை.

## காயத்ரீ விஷயம்.

(முன் 57-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆகவே ஸூரியாந்தர்கதராயுள்ளவர் நாராயணரென்றும் அவரைத்தான் காயத்ரியால் தியானிக்கப்படுகிறதென்றும் நிச்சயம் செய்யவேண்டியதாகும். ஆகலால் தான் ஸ்ரீபகவத்பாதாள், "அர்க்கமண்டலகம் விஷ்ணும் த்யாத்வைவ த்ரிபதீம் ஜபேத்" என்று ஸூரியமண்டலத்திலுள்ள விஷ்ணுவை தியானித்து காயத்ரியை ஜபிக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு 'த்யேய: ஸதா ஸவித்ரு மண்டல மத்யவர்த்தி நாராயண:' என்று த்யானப்ரகாரத்தையும் ஸம்க்ஷேபமாய் புராணாந்தரவாக்யத்தால் அறிவித்திருக்கிறாரென்பது ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். காயத்ரியின் ஒவ்வொரு பாதத்திற்கும் ஒவ்வொரு அக்ஷரத்திற்கும்கூட இன்ன ரிஷி, இன்ன சந்தஸ், இன்ன தேவதை என்று அறிந்துதான் ஜபம் செய்யவேண்டுமென்றும், அவ்வாறு தெரிந்துகொள்ளாமல் ஜபம் செய்தால் அந்த ஜபம் நிஷ்பலம் என்றும் பிரமாணங்கள் அறிவிக்கின்றன. அதற்காக இவைகளைப்பற்றி சிறிது ஆராய்வோம். தத்ஸவிதுர் வரேண்யம் என்னும் பாதத்திற்கு காயத்ரீ சந்தஸ், ரிஷி விசுவாமித்திரர் தேவதை ப்ரம்மா, பர்கோதேவஸ்ய தீமஹி என்னும் பாதத்திற்கு சந்தஸ் காயத்ரி, ரிஷி விசுவாமித்திரர், தேவதை விஷ்ணு. தியோ யோன: ப்ரசோதயாத் என்னும் பாதத்திற்கு சந்தஸ் காயத்ரி, ரிஷி விச்வாமித்திரர், தேவதை ருத்திரன். காயத்ரி மந்திரத்திலுள்ள (1) தத் (2) ஸ (3) வி (4) து: (5) வ (6) ரே (7) ணி (9) யம் (9) பர் (10) கோ (11) தே (12) வ (13) ஸ்ய (14) தீ (15) ம (16) ஹி (17) தி (18) யோ (19) யோ (20) ந: (21) ப்ர (22) சோ (23) த (24) யாத் ஆக இந்த இருபத்தி நான்கு அக்ஷரங்களுக்கு எல்லாமே ரிஷிப்ரஜாபதி, சந்தஸ் காயத்ரி 1 கேசவன் 2 நாராயணன் 3 மாதவன் 4 கோவிந்தன் 5 விஷ்ணு 6 மதுஸூதனன் 7 த்ரிவிக்ரமன் 8 வாமனன் 9 ஸ்ரீதரன் 10 ஹிருஷீகேசன் 11 பத்மநாபன் 12 தாமோதரன் 13 ஸங்கர்ஷணன் 14 வாஸுதேவன் 15 ப்ரத்யும்னன் 16 அநிருத்தன் 17 புருஷோத்தமன் 18 அதோக்ஷஜன் 19 நரஸிம்ஹன் 20 அச்யுதன் 21 ஜனார்த்தனன் 22 உபேந்திரன் 23 ஹரி 24 கிருஷ்ணன் ஆக இந்த இருபத்திநான்கு விஷ்ணு மூர்த்திகள் முறையே தேவதையாவார்கள் என்று ஸ்ரீபகவத்பாதாள் அறி

வித்திருக்கிறார். த்ரிபிஸ்வரூப பாதைஸ்ச பின்னேனைகேன சைவஹி காயத்ரி நாமகோ விஷ்ணு: சதுஷ்பாத் ஸம்ப்ரகீர்த்தித:। பின்ன பாதாஸ் தஸ்ய ஜீவா: தஸ்ய ஸாத்ருச்ய மாத்ரத:। ஸ்வரூபபாதா: விஷ்ணோஸ்து த்ரயோஹதிவிஸம்ஸ்திதா:। என்கிறது தத்வஸாரம். அதாவது காயத்ரி என்னும் பெயருள்ள விஷ்ணு நான்கு பாதமுள்ளவரென்று சொல்லப் பட்டிருக்கிறார். பின்னர்களான ஜீவர்கள் ஓர் பாதமாவார்கள். ஞானி களால் பகவானுக்குஸமானர்களாயிருப்பதால் அவர்கள் கௌணமாயுள்ள பாதமாகிறார்கள். மற்ற மூன்று பாதங்கள் ஸ்வரூபமான பாதங்கள் தனித்தனி அவைகள் பின்னமானவைகள். அவர்கள் பூலோகத்திற்கு மேல் சுவேதத்வீபம், அனந்தாஸனம், வைகுண்டம் ஆகிய இந்த மூன்று லோகங்களில் நாராயணர், வாஸுதேவர், வைகுண்டர் என்று முறையே மூன்று ரூபத்துடன் இருப்பவர்கள். பாதோஸ்ய ஸர்வாபூதானி த்ரிபாதஸ்யாம்ருதம்திவி என்று புருஷஸூக்தம் இதைத்தான் அறிவிக்கிறது. ஆக காயத்ரிக்கு நான்குபாதங்கள் இருப்பதாயும் கூறப்பட்டிருக்கின்றன. இதை சாந்தோக்ய உபநிஷத்தின் பாஷியத்திலும் ஸ்ரீபகவத்பாதாள்விவரித்து கூறியிருக்கிறார். ரிக்பாஷியத்தில் "ஓம் அசேஷ குணாதார இதி நாராயணோப்யஸௌ। பூர்ணோ பூதிவரோநந்தஸுகோயத்வ்யாஹ்ருதிரித:। குணைஸ்தத: ப்ரஸவிதா வரணீயோ குணோன்னதே:। பாரதிக்ஞான ரூபத்வாத் பர்கோத்யேயோ. கிலைர்ஜனை.। ப்ரேரகோ அசேஷ புத்தீனாம் ஸ காயத்ர்யர்த்த ஈரித:॥" என்று ஸ்காந்த புராண வசனத்தைக் காட்டுகிறார். அதாவது பகவான் ஸமஸ்த குணங்களுக்கும் ஆதாரமாயிருப்பதால் ஓம் என்னும் சப்தத்தின் அர்த்தமாவார். இந்த ஓம் காரம் நாராயணனைக்குறிக்கிறது. ப்ரணவமாகிற ஓம்காரத்தால் சொல்லப்படுகிறவர்தான் பூ: புவ: ஸ்வ: என்னும் வ்யாஹ்ருதிகளால் சொல்லப்படுகிறார். பூ: என்பதால் அந்த நாராயணன் பூர்ணரென்றும் புவ: என்பதால் ஐசுவரியத்தால் வரனாய் மஹைசுவரியவானென்றும், ஸுவ: என்பதால் அநந்தஸுகமுள்ளவரென்றும் சொல்லப்படுகிறார். ஆக ப்ரணவத்தால் சொல்லப்படுகிறவரே வ்யாஹ்ருதியாலும், சொல்லப் படுகிறார். அப்படி வியாஹ்ருதியால் சொல்லப்பட்டிருப்பினும், தத்ஸவிதுர்வரேண்யம், பர்கோதேவஸ்யதீமஹி, தியோயோன: ப்ரசோதயாத் என்னும் காயத்ரியாலும் சொல்லப்படுகிறார். அதாவது பகவான் தத் குணங்களால் வ்யாப்தர். ஸவிதா ஜகத்தை உண்டுபண்ணுகிறவர் வரேண்ய: குணங்கள் மிகுந்திருப்பதால் ஜனங்களால் பஜனம் செய்யத் தகுந்தவர். ப்ரகாசம், க்ரீடை, ஞானம் இந்த ஸ்வரூபமாயிருப்பதால் பர்க்கர் எனப்படுகிறார். எல்லா ஜனங்களுடைய புத்தியின் ப்ரே



ரணையை அவர் செய்பவராதலால் எல்லா ஜனங்களாலும் அவர் தியானிக்கத்தகுந்தவர். இது காயத்ரியின் அர்த்தமாகிறது. அதாவது ய: யார் ந: எங்கள் எல்லா ஜீவர்களுடையவும் தியா: புத்தியை ப்ரசோதயாத்ப்ரேரிபிக்கிறாரோ அந்த ஸவிது: ஜகத்தை உண்டுபண்ணும் தேவஸ்ய நாராயணனுடைய தத் குணங்களால் வியாப்தமானதும், அதனால் தான் வரேண்யம் ஜனங்களால் பஜிக்கத்தகுந்ததாயும் பார்க்க. பிரகாசம் க்ரீடை ஞானம் இவைகள் சேர்ந்ததாயுள்ள ரூபத்தை தீமஹி த்யானம் செய்கிறோம். தத்வஸாரமென்னும் நூலில் "ஸ்ருஷ்டிகர்த்தா பிரம்ம நாமா யோ விருஜச்சதுரானனம்। அந்தர்யாமி விரிஞ்சஸ்ய லோகாநார்த்தோ ஜனார்த்தன:। வைகுண்டலோக ஆஸ்தே ஸத்விதிய வபுஷா ஹரி:। உ காரவாச்ய: ஸவிபு: ந்ருஸிம்ஹோ ருத்ரநாமக:। ரௌத்ரத்வாத் ஸ சிவஸ்யாபி ஸ்ரஷ்டா ஸம்ஹார காரக:। அந்தர்யாமி சிவஸ்யாபி மகாரார்த்த: ப்ரகீர்தித:। ஏவம் த்ரியாத்மகம் விஷ்ணும் ப்ரணவோயம் த்ரியாத்மக:। ஏவம் பிரதிகிலாசஷ்டே பிந்து: வக்த்யநிருத்தகம்। ப்ரத்யும்னாத்யா: நாதபூர்வா; ஸர்வான் நாராயணாத்மகான் । பத்மநாபாதிகா: ஏவ மூர்த்தி: நாராயணேந்தரா:। ப்ரணவோயம் வதத்யஷ்டௌதஸ்மான் நான்யாபிதாயக:॥ என்று சொல்லப்படுவதாய் ஐதரேய பாஷ்யத்தில் காட்டப்பட்டிருக்கிறது. இதன் பொருளாவது:—ஓம் என்பதில் உள்ள அகாரம் உகாரம் மகாரம் என்பதில் அ என்னும் எழுத்தால் ஸ்ருஷ்டித்து வளர்த்துவதால் அதாவது பிரும்மணம் செய்வதால் பிரம்மா எனப்படுகிறவராய், சதுர்முகனை பிரம்மனை ஸ்ருஷ்டித்து சதுர்முகனிடம் அந்தர்யாமியாயிருந்து வரும் ஜனார்த்தனர் சொல்லப்படுகிறார், வைகுண்டலோகத்தில் இருப்பவராய் உச்சலோகத்தில் இருந்து வருவதால் உ என்ற எழுத்தால் மும்மூர்த்திகளில் இரண்டாவது ரூபமான அவர்தான் சொல்லப்படுகிறார். அந்த பகவான் தான் நரஸிம்மராய் பயங்கரமாய் இருப்பதால் ருத்திரனெனப்பெயர்கொண்டு ருத்திரனை சிவனையும் ஸ்ருஷ்டித்து ஸம்ஹாரம் செய்பவராய், இருந்துவருகிறவரான சிவனிடம் அந்தர்யாமியாயிருப்பவர் ஓங்காரத்திலுள்ள அகாரம் உகாரம் மகாரம் இவைகளில் ம என்ற எழுத்தால் சொல்லப்படுகிறார். இவ்வாறு மும்மூர்த்தி ஸ்வரூபமாகிய பகவானை அ, உ, ம என்னும் மூன்று எழுத்துக்களைக் கொண்ட ஓங்காரமாகிய ப்ரணவம் குறிக்கிறது. ஓம் என்பதில் உள்ள புள்ளி அதாவது பிந்து அநிருத்த மூர்த்தியைக் குறிக்கிறது. ஓம் என்பதிலுள்ள நாதம் ப்ரத்யும்னன் ஸங்கர்ஷணன் வாஸுதேவன் நாராயணன் என்ற நான்கு பகவத் ரூபங்களைக் குறிக்கிறது. அநிருத்தாதிகள் என்போர் பகவத் ரூபங்களையன்றி மன்மதபுத்ரனை அநிருத்தாதி

ஜீவர்களைக் காட்டுவதில்லை. இவ்வாறு காட்டுவதோடு ப்ரணவம் வேறு ரூபங்களையும் குறிக்கிறது. அவை யாதெனில் பத்மநாபன் தாமோதரன் ஸங்கர்ஷணன் வாஸுதேவன் ப்ரத்யும்னன் அநிருத்தன் புருஷோத்தமன் நாராயணன் என்ற அஷ்டமூர்த்திகளையும் காட்டுகிறது. "அநிருத்தஸ்து பூர்நாமா ஹுதாசே ஸவ்யவஸ்தித:| ப்ரத்யும்னோ பகவான் வாயு: புவ இத்யேவ கீர்த்தித:| ஸங்கர்ஷண: ஸுவ: நாம ஸூர்யே திஷ்டதி கேசவ:| சுக்லம் து வாஸுதேவாக்யம் அநிருத்தம் ஸுநீலகம் | ஸங்கர்ஷணம் பிங்கலம் ச ப்ரத்யும்னம் ஹரிதம் ஸ்ம்ருதம் | நாராயணம் லோஹிதம் ஸ்யாத் பஞ்ச ரூபாண்யஜோ ஹரௌ" வ்யாஹ்ருதியில் உள்ள பூ: என்னும் வார்த்தை அக்னியில் அந்தர்கதராயுள்ள அநிருத்த மூர்த்தியைக் குறிக்கிறது. புவ: என்னும் வார்த்தை ப்ரத்யும்ன மூர்த்தியைக் குறிக்கிறது. அவரே வாயு என்று அழைக்கப்படுகிறார். ஸுவ: என்னும் வார்த்தை சூரியாந்தர்கதராயுள்ள ஸங்கர்ஷண மூர்த்தியைக்குறிக்கிறது. அநிருத்தமூர்த்தி நீலவர்ணமுள்ளவர். ப்ரத்யும்னர் மஞ்சள் வர்ணமுள்ளவர். சங்கர்ஷணர் செங்கல் நிறமுள்ளவர். வாஸுதேவர் சுத்த வெண்மை நிறமுள்ளவர். நாராயணர் ரக்தம்போல் கெட்டி சிகப்பு வர்ணமுள்ளவர் என்று இந்த மூர்த்திகளின் ஸ்தானத்தையும் தேக வர்ணத்தையும் மற்றொரு நூல் அறிவிக்கிறது.

(தொடரும்.)

ஸ்ரீ நாராயணபண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மத்வவிஜயம்.

## ஆறுவது ஸர்க்கம்.

(முன் 55ம் பக்கம் தொடர்ச்சி.)

துரௌபதி அச்சமயம் பீஷ்மாசாரியார் முதலான ஞானி ஜனங்களால் இந்த துச்சாஸனன் செய்யும் வஸ்திராபகர்ஷணத்தை தடை செய்யுங்களென்றும் இவ்வாறு செய்வது தர்மமல்லவென்றும் இது கஷ்டம் கஷ்டம் என்றும் சொல்லப்பட்டாள். வேதமும் ஞானிகளால் இந்த மாயா வாதிகளின் ஐக்யபரமாய் அர்த்தம் செய்வதை தடுக்கப்பட வேண்டுமென்றும், "அந்தம் தம: ப்ரவிசந்தியே வித்யா முபாஸதே | ததோ பூய இவதே தமோய உ வித்யாயாம்ரதா:" என்னும் உபநிஷத் வாக்யத்தின்படி துர்மதத்தை அவசியம் நிராகரணம் செய்யவேண்டியது தர்மம் என்றும் அவர்கள் சொல்லும் ஐக்யவாதம் தர்மமாகாதென்றும் இது பெரும் கஷ்டமென்றும் சொல்லப்பட்டது. துரௌபதி அச்சமயம் ஸ்ரீ கிருஷ்ணரால் வஸ்திரதானம் செய்யப்பட்டு ஸம்ரக்ஷிக்கப்பட்டவளாயும், அக்ஞானம் முதலான தோஷமில்லாதவளாயும் பீமசேனரைத் தவிர இதரரை ஸம்ரக்ஷகனாய்க் கொள்ளாதவளாயும் அச்சமயம் ஸம்ரக்ஷகரை அபேக்ஷிப்பவளாயுமிருந்தாள். வேதமும் "ஸத்யம் பிதா ஸத்யம் பிதா ஸத்யம் பிதா மைவாருண்யோ மைவாருண்ய:" முதலான வாக்யங்களால் ஐக்யமதம் நிராகரிக்கப்பட்டிருக்கிறபடியால் ஸ்ரீ வேத வியாஸரால் மிகவும் ஸம்ரக்ஷிக்கப் பட்டதாயும் பௌருஷேய தோஷாதிகளில்லாததாயும், ஸ்ரீ மத்வாசாரியாரைத் தவிர்த்து வேறு ஸம்ரக்ஷகரில்லாததாயும் இச்சமயம் தனக்கு ஸரியான அர்த்தத்தைத் தந்து ஸித்தாந்தத்தைக் கண்டிக்க ஸம்ரக்ஷிக்க அபேக்ஷிப்பதாயுமிருந்தது. இப்பேர்ப்பட்ட சுருதி ஸமூகத்தை முன்பு பீமசேனர் துரௌபதியைக் கண்டதுபோல் கண்டு கருணா சமுத்திரரான பூர்ண ப்ரக்ஞாசாரியார் என்னும் ஸ்ரீ மத்வாசாரியார் மாயாவாதிகளின் ஸித்தாந்தத்தைக் கண்டிப்பதாய் திடமான ப்ரதிக்ஞை செய்தார்.

### பதரிகாசிரமப்ரயாணம்.

(32) ஸ்ரீ மத்வாசாரியர் தூரதேசமாயுள்ள பதரிகாசிரமப்ராந்தியத்திற்குச் செல்ல விருப்பங்கொண்டு அங்கு அந்த உடுபியில் வசித்துவரும்பொழுது, ஸ்ரீமத் பகவத் கீதைக்கு தாம் சுயம் தமது அர்த்தத்தின்படி பாஷ்யத்தை இயற்றி, தூரதேசம் செல்ல விருப்பங்கொண்டவன் தம் ஜனங்களிடம் எவ்வளவு சிலவானாலும் அழியாதிருக்கும் உத்தமமாயுள்ள திரவியத்தைக் கொடுப்பதுபோல், சிரவணாதி எவ்வளவு உபயோகங்களாலும் எப்போதும் அழியாதிருக்கும் உத்தமமான சொத்தாகிய அந்த கீதா பாஷ்ய கிரந்தத்தை, தமக்கு முன் தம் குருவிடம் ஸன்யாஸம் பெற்று தமக்கு ஜ்யேஷ்டராயிருக்கும் ஓர் ஸன்யாஸியாருடைய

சேர்ந்திருந்த தம் குருவான அச்யுதப்ரேக்ஷரிடம் கொடுத்தார். (33) அவர் தேவகார்யார்த்தமாய் செல்லுவதாய் காரணம் சொல்லி, கங்காதி தீர்த்த யாத்திரை செல்ல அனுமதியைத் தர அவரைப் பிரார்த்திக்கவும், புருஷோத்தம தீர்த்தரான அந்த அச்யுதப்ரேக்ஷாசாரியார் யாத்ரா மார்க்கத்தில் ஸ்ரீ மத்வாசாரியாருக்கு க்ஷராக்ஷர புருஷர்களுக்கு உத்தமராயுள்ள புருஷோத்தமரான ஸ்ரீ நாராயணரின் ஸம்ரக்ஷணை ஏற்படும்படி பிரார்த்தித்துக்கொண்டு ஸந்யாஸிகளில் சிரேஷ்டரான ஸ்ரீ மத்வாசாரியாருக்கு கங்கா யாத்திரை செல்ல அனுமதியைத் தந்தார். (34) பிறகு வாயு பகவானின் அவதாரமான ஸ்ரீ மத்வாசாரியார் எவ்வாறு மண் தூசிகளில்லாததாய் மலய பர்வதத்தின் பிராந்தியத்தில் சஞ்சரித்து, அங்குள்ள சந்தன மரங்களின் வாஸனையைக்கொண்டதால், எல்லோராலும் உலகில் கொண்டாடப்பட்டதாய் எப்போதுமே அதனால் வண்டுகளால் பின்தொடரப்பட்டதாய் மார்கஸ்தர்களுக்கு வெய்யில் சங்கடத்தைப் போக்குவதாயுள்ள மலயமாருதம் என்னும் நல்ல காற்று வடதிசை செல்லுமோ அவ்வாறு ரஜோ குணாதிகளில்லாத சுத்த ஸாத்வீகராய், மலய தேசத்தில் சஞ்சாரம் செய்து அங்குள்ள துர்வாதிகளை ஜயித்து உலகில் மகா பண்டிதரென்று கொண்டாடப்பட்டவராய், எப்போதுமே ஸாது ஸமூகங்களால் பின்தொடரப்பட்டவராய் சஞ்சாரத்தில் தன் தரிசனாதிகளால் ஸாது ஸமூகங்களின் ஸம்சார தாபத்தைப் போக்கிக்கொண்டு உத்திரதேச ப்ராந்தியத்திற்குச் சென்றார். (35) பூர்ணப்ராக்ஞரான ஸ்ரீ மத்வாசாரியார் தீர்த்தங்கள் சாஸ்திரங்கள் ஆகிய இருவகை தீர்த்தங்களையும் பவித்ரமாக்கினார். தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து ஆங்காங்குள்ள மகாத்மிய விசேஷங்களை ப்ரகடனம் செய்து அவைகளை பரிசுத்தமாக்கினார். தீர்த்தங்களாகிய பாகவதாதி சாஸ்திரங்களை முன் பின் விமரிசைசெய்து அவைகளுக்கு இருந்துவந்த விருத்தமான வ்யாக்யானங்களைக் கண்டித்து மறைந்து கிடந்த மூல பாடங்களை எல்லாம் தேடி பிடித்து ஸ்ரீ வேதவ்யாஸரின் உண்மையான பாடத்தை ஸ்தாபித்து இவ்வாறு அவைகளை பரிசுத்தமாக்கினார். தீர்த்தங்கள் அந்தக் கரணத்தை பரிசுத்தப்படுத்தும் ஜலப்ரவாகத்தால் கூடியவை. சாஸ்திரங்களோ



சித்த சுத்தி செய்யும் வாக்ய ஸமூகங்களுடன் கூடியவை. (36) பாபத்தைப் போக்கும் கீர்த்திமானான ஸ்ரீ மத்வாசாரியார் வாசுதேவரான நாராயணரின் சரணத்தில் எப்பொழுதும் ஸ்மரணையுடன் சேர்ந்திருப்பவராயும் தன் சாமர்த்தியத்தாலும் பூராவாய் பரமசிவனை கீழ்படுத்தியிருப்பவராயும் இருப்பதால், வாஸுதேவரான நாராயணரின் சரணத்தில் ஒரு தரம் தான் உற்பத்திகாலத்தில் சேர்ந்திருப்பவளும், பரமசிவனால் ஆதரணையுடன் விஷ்ணுவின் பாதத்தினின்றும் பிறந்தவளென்று தலையால் தரிக்கப்பட்டவளேயன்றி தன்னைவிட உத்தமமானவளென்று தரிக்கப்படாதவளுமான கங்கையின் வெள்ளத்தை தன் மகாத்மியத்தால் மீறியதுடன் பதரிகாசிரமம் போகும் வழியில் அந்த கங்கையைத் தாண்டினார். (37) அந்தந்த தீர்த்த க்ஷேத்திரங்களில் சஞ்சரித்துக்கொண்டு மூவுலகிலும் அற்புதமாயுள்ளதும் நினைத்த மாத்திரத்தில் ஜனங்களுக்கு பரம சௌக்கியத்தை அளிப்பதாயுமுள்ள காரியங்களைச்செய்து கொண்டு மனுஷ்யர்கள் போகக்கூடியதாயுள்ள ஹிமவத்கிரிக்கு தென்புறத்திலுள்ளதான பதரிகாசிரமமென்னும் புண்யக்ஷேத்திரத்தின் ஸமீபம் போய் சேர்ந்தார். (38) மனுஷ்யர்கள் போககூடியதான இந்த சின்ன பதரிகாசிரமத்தில் ஹிமவத்கிரி முதல் ஸ்ரீராமசேது பரியந்தம் இருந்துவரும் ஒன்பதினாயிரம் யோஜனை தூரமுள்ளதான தனுஸ்ஸு போன்ற வடிவமுள்ள ஸம்பூர்ண பரதகண்ட பூமியை அலங்கரித்துக்கொண்டு, ந என்ற எழுத்தை முதல் எழுத்தாய்க் கொண்ட ராயணர் என்னும் பெயருள்ள அதாவது நாராயணரெனப்படுகிறவரான பரமாத்மாவை, பூர்ணப்ரக்ஞரான ஸ்ரீ மத்வாசாரியார் நமஸ்கரித்து அவருக்கு பேட்டி சாமானாக தான் இயற்றிக்கொண்டு வந்திருந்த தன் ஸ்ரீ பகவத் கீதா பாஷியத்தை ஸமர்ப்பணம் செய்தார். (39) சாஸ்திரங்களை அதிகம் விமரிசை செய்தவரான ஸ்ரீ மத்வாசாரியார் அங்குள்ள தன் சிஷ்யக் கூட்டங்களை தூரவிலகிப்போகும்படி செய்து, அங்கு ஸ்ரீ நாராயணரின் சன்னதியில் அந்த பகவானுடைய சந்தோஷத்திற்காகவென்று தான் இயற்றியிருக்கும் கீதா பாஷியத்தைச் சொல்லத் துவக்கி, "தேவம் நாராயணம் நத்வா ஸர்வதோஷ விவர்ஜிதம்| பரிபூர்ணம் குரூம் பஸ்சாத் கீதார்த்தம் வக்ஷ்யாமி சக்தித:||

என்று முதல் மங்களாசரண சுலோகத்தில், பகவான் ஸ்ரீகிருஷ்ணருடைய உண்மையான கீதையின் தாத்பர்யத்தை என் சக்திக்குத் தகுந்தவாறு சொல்லுகிறேன் என்று சொல்லிக்கொண்டார். (40) ஹே மத்வாசாரியாரே! அதியந்தம் அறியமுடியாததாயிருப்பினும் இந்த பகவத்கீதையின் ஸம்பூர்ணமாயுள்ள அர்த்தத்தைசொல்ல நீர் ஸமர்த்தராயிருந்து அதை எல்லாம் இந்த கீதாபாஷியத்தில் நீர் சொல்லவில்லையாதலால், நீர் இந்த மங்களாசரண சுலோகத்தில் என் சக்திக்குத் தகுந்தபடி சொல்லுகிறேன் என்று குறிக்கும்படியாய் 'கீதார்த்தம் வக்ஷ்யாமி சக்தித:' என்று சொல்லியிருப்பதை எடுத்துவிட்டு 'கீதார்த்தம் வக்ஷ்யாமி லேசத:' என்று மாற்றிச்சொல்லும் என்றிவ்வாறு ஜகத் பிதாவான ஸ்ரீ நாராயணர் ஆக்ஞையிட்டார். பிறகு ஸ்ரீ மத்வாசாரியார் அந்த கீதா பாஷியத்தை ஸம்பூர்ணமாய் இரவில் வெகுநேரம் சொல்லி முடித்தபின் ஸ்ரீ மத்வாசாரியாரும் அவருடைய சிஷ்யர்களும் நித்திரை செய்து வரவும், தரையிலடித்து சப்தித்து ஸ்ரீ மத்வாசாரியாரை எழுப்பி, மறுபடியும் இந்த பாஷியத்தை வாசித்துக்காட்டும் என்று ஸ்ரீநாராயணர் சொன்னதை தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட சிஷ்யர்களும் ப்ரத்யக்ஷமாய் சிரவணம் செய்தனர். (42) இலர் விக்ரஹத்தில் அமைந்திருக்கும் திவ்ய ஸ்வரூபங்கொண்ட அந்த பகவான் நாராயணர் சொன்ன விலக்ஷணமான குரலோசையைக் கேட்டு அவருடைய உண்மையான தாத்பரியத்தை அறிந்து விழித்தெழுந்து அச்சமயம் மறுபடியும் தம்சிஷ்யர்களுக்கு ஸ்ரீமத்வாசாரியார் தம் கீதா பாஷியத்தை ப்ரவசனம் செய்தார். (43) அவர் ப்ரதிதினமும் மிக்க சீதளமான கங்கையாகிய அளகநந்தா கங்கையில் விடிய நான்கு நாழிகை பொழுது இருக்கும்பொழுது அதாவது அருணோதயகாலத்தில் ஸ்நானம் செய்து வந்தார். அங்குள்ள ஜனங்களும் அந்த ஜலத்தின் குளிருக்கு பயந்து அதைத்தொடவும் மாட்டார்கள். அப்பேர்ப்பட்ட ஜலத்தில் ஸ்ரீமத்வாச்சாரியார் ஸ்நானம் செய்து வந்தார். அவர் ப்ராணபதியான ஸ்ரீ வாயுபகவானின் அவதாரம்தானே. (44) ஆசை முதலியவை இல்லாத சுத்தாந்தக்கரணமுள்ள ஸ்ரீமத்வாசாரியார் அவரிடம் எப்பவும் ஸந்தோஷமடைந்திருக்கும் பகவான் நாராயணரின் விசேஷமான சந்தோஷத்தைப்பெற விரும்பி அந்த பதரிகாசிரமத்திலுள்ள நாராயணர் கோவிலுக்குள் ஏகாந்தமாய் பகவானை தியானம் செய்து கொண்டு மேலான மௌன விரதத்தையும் சுத்தமான உபவாஸத்தையும் செய்து வந்தார்.

(தொடரும்)

## அப்பைய்ய தீக்ஷதரின் அதிக்ஷேபனைகளுக்கு கண்டனம்.

---

(முன் 94ம் பக்கம் தொடர்ச்சி)

ஆதலால் கில சுருதிகள் என்று உண்டென்றும் அவைகளை எடுத்துச் சொல்வது ஸம்பாவிதர்களின் ஸம்பிரதாயமென்றும் எமது ஆசாரியாள் அதன்படி சொன்னது தோஷமல்லவென்றும் ஆகவே நீங்கள் சொன்ன தூஷணை ஆக்ரஹத்தால் ஏற்பட்டதென்றும் நன்கு விளங்குகிறது.

பிறகு இந்த வேதங்களுக்கு அனுசரணையாய் அத்யாத்மம் நாராயணஸம்ஹிதை பிருஹத்ஸம்ஹிதை முதலான நூல்களிருப்பதையும் இவைகள் எமது ஆசாரியாருக்கு மட்டில் தெரிந்ததென்றும் நீங்கள் தூஷித்திருக்கிறீர்கள். இவ்வாறு நூல்கள் இருந்து வருவதாய் ஸம்ஹிதானுக்ரமத்தினின்றும் நன்கு தெரிய வருகிறது. அதை அறிந்துகொள்ளாமல் இவ்வாறு நூல்கள் இருப்பதாகவே தெரியவில்லையென்று சொல்லியிருப்பது உங்கள் அக்ஞானத்தை நன்கு விளக்குகிறது. கில சுருதிகள் உதாஹரித்திருக்கும் விஷயத்தில் சொன்ன கக்ஷியால் இவைகளை உதாஹரித்திருப்பது தோஷமில்லையென்று ஏற்படுவதால் இதற்காக மீண்டும் அவைகளை எடுத்துச்சொல்வதில்லை.

அபிரசித்தமான சுருதிகளை எடுத்துச் சொல்லியிருப்பதைக்கொண்டு, அதில் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு தன் மதிப்பு குறையாதிருக்க, தான் ஆப்தர் என்பதை அறிவித்துக்கொள்ள, ஹனுமார் பீமசேனர் மத்வர் என்று வாயு பகவானின் மூன்று அவதாரமென்று தன்னை வாயுபகவானின் அவதாரமாக சொல்லி கோஷித்துக்கொண்டு, அதற்கு சாக்ஷியாய் "ப்ரதமோ ஹனுமான் நாம" என்ற வாக்யத்தைச் சொல்லி, அதன்படி பளித்தாதத்வபுஷே முதலான ரிக் வேத மந்திரங்களை மூன்று அவதார பரமாய் காட்டியிருப்பது வைதீக மரியாதையை மீறியதாகுமென்று நீங்கள் தூஷித்திருக்கிறீர்கள். இனி அந்த தூஷணை எவ்வாறு பொருத்தமானதென்பதை விமரி

சை செய்வோம். எமது ஆசாரியார் தம் சொல்லுக்கு ஆதாரமாய் தம் ஸ்வரூபத்தைக் காட்ட வேதங்களை எடுத்துச் சொன்னது வேதத்தின் கௌரவத்தை ஸம்ரக்ஷித்ததாய்த்தான் ஆகும். நான் சொல்வதெல்லாம் வேதத்தில் சொன்னபடித்தான் இருக்கிறதே தவிர்த்து அதை மீறி நான் சொல்வதில்லை என்ற எண்ணத்தின் பேரில் தான் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ரிக்வேத மந்திரங்களுக்கு இவ்வாறு வாயு பகவானின் அவதாரபரமாய் அர்த்தம் செய்வது நிருக்தம் வியாகரணம் அனுக்கிரமம் முதலானவைகளுக்கு விரோதமில்லை என்றும், அதிப்ரஸங்கம் என்னும், தோஷத்தின் சந்தேகமுமில்லை என்றும், விஸ்தாரமாய் இந்த மந்திரங்களின் அர்த்தங்களை, ஸ்ரீபைடனஸீ நாராயணாசாரியார் இயற்றிய மத்வமந்திரார்த்த மஞ்ஜரி என்னும் நூலில் விளக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது. வேத மந்திரங்களுக்கெல்லாம் அர்த்தம் செய்த வித்யாரண்யர் இவ்வாறு இந்த வேத மந்திரங்களுக்கு அர்த்தம் செய்யாமலிருக்கும்பொழுது, நான் தாங்கள் சொன்ன அர்த்தத்தை எவ்வாறு ஏற்றுக்கொள்வதென்று பிரசினை செய்தால் அது சரியானதாய் ஆகமாட்டாது. இதரர்கள் செய்திருக்கும் வேறு அர்த்தம் ஏற்றுக்கொள்ளத் தகாததாயிருக்கும் பக்ஷத்தில், சத்வாரி சிருங்கா என்னும் மந்திரத்திற்கு சத்வாரி யஸ்ய சிருங்காணி அவயவானி என்று தான் எண்ணிய அர்த்தத்துக்கு தகுந்தபடி மகாபாஷியகாரர் செய்திருக்கும் வியாக்யானமும், அப்படியே ஸோதேவோ அஸி வருணயஸ்யதே ஸப்த ஸிந்தவ: அனுக்ஷரந்தி ககுதம் ஸூர்ம்யம் ஸகஷிரா இவ என்னும் மந்திரத்தில் ஸப்த ஸிந்தவ: என்பதற்கு ஸப்த விபக்திகள் என்று அர்த்தம் செய்திருப்பதும், அக்னி முதலானவர்கள் தேவதைகளாய் இருப்பதால் ஸர்வானுக்ரமத்தில் சொன்ன அக்னிர்மூர்த்தாதிவ: ககுத் முதலான மந்திரங்களுக்கு செவ்வாய் முதலான கிரஹங்களின் பரமாய் ஸ்மிருதிகாரர் செய்த அர்த்தமும் ஏற்றுக்கொள்ளாததாய் போகவேண்டும். அவ்வாறு வித்யாரண்யர் செய்யாத அர்த்தத்தை இதரர்கள் செய்து அதை நாம் ஒப்புக்கொண்டிருக்கும் பொழுது, ரிக்வேத மந்திரங்களுக்கு நிருத்தம் வியாகரணாதிகளுக்கு விரோதமில்லாமல் நம்மவர்கள் செய்திருக்கும் அர்த்தத்தை ஏன் ஒப்புக்கொள்ளக்



கூடாது. இதரவ்யாக்யானங்களுக்கு விரோதமாய் இல்லாததாய் இருப்பதால் அவ்வாறு வித்யாரண்யர் செய்திருக்கும் அர்த்தத்தை நாம் ஒப்புக்கொள்கிறோம். விரோதமயுள்ள பாகங்களை நாம் ஏற்றுக்கொள்ளவதில்லைதான். ஆகவே அவர் செய்த வியாக்யானம் தான் ஏற்றுக்கொள்ளத்தகுந்ததென்று, நியமமும் இல்லை. ஸ்ரீமத்வாசாரியார் தான் வாயுபகவானின் அவதாரமென்றும் தன் வார்த்தை ஏற்றுக்கொள்ளத்தகுந்ததென்றும், சொன்னது தம்மிடம் பக்திகொண்ட தம் சிஷ்யர்களைக் குறித்துச் சொன்னதேயன்றி உங்களைப்போன்ற பிரதிவாதிகள் நம்புவதற்காக சொன்னது இல்லை. இவ்வாறே அவருடைய குருவான ஸ்ரீவேத வியாஸர் தன் ஸ்வரூபத்தைச் சொல்லியிருக்கிறார். "கோஹ்யன்ய: புண்டரீகாக்ஷாத் மகாபாரத க்ருத்பவேத்" புண்டரீகாக்ஷனை ஸ்ரீநாராயணன் நான் இல்லாமல் இருக்கும் பக்ஷத்தில் இந்த மகாபாரதத்தை எப்படி செய்பவனாவேன் என்று, தான் ஸ்ரீநாராயணாவதாரமென்பதை ஸ்ரீவேதவியாஸர் காட்டிக்கொடுத்திருக்கிறார். தன் குருவின் வழக்கத்தை அனுஸரித்து அவருடைய சிஷ்யரான ஸ்ரீ மத்வாசாரியாரும் தான் வாயு பகவானின் அவதாரமென்றும், ஸ்ரீநாராயணருக்கு வெகு ப்ரியராதலால் ஸ்ரீ நாரயணரான வேதவியாஸரின் அந்தரங்கமானதாயுள்ள உண்மையான பிரம்ம ஸூத்திராதிகளின் அர்த்தத்தை அறிந்தவரென்றும், தம் சிஷ்யர்களுக்கு சுயமாய் இருந்துவரும் விசுவாசம் திடமாவதற்காக தம் சொரூபத்தை முக்கியமான கிரந்தங்களின் முடிவில் சொல்லிக் கொண்டிருக்கிறாரேயல்லாது இதரர்களுக்காக சொன்னதில்லையென்று நிர்ணயம் செய்துகொள்ளவேண்டியதவசியமாகும். அவர் யாராயிருந்தால் தான் என்ன? அவர் சொன்ன யுக்திகளையும் பிரமாணங்களையும் நீங்கள் கண்டனம் செய்து உங்கள் மதத்தின்மீது சொல்லியுள்ள தோஷங்களைப் போக்கிக்கொள்ளுகிறது தானே! அது முடியாமற் போயிருக்கும்பொழுது, அவர் சொல்லியபடி கண்டிக்கப்படமுடியாததான ஸ்ரீவேதவியாஸரின் அந்தரங்கத்தை அவர் அறிந்தவரென்பது உண்மையென்றல்லவோ ஏற்படுகிறது. அவர் வாயுபகவானின் மூன்றாவது அவதாரமென்பது இந்த நிரூபத்தின் துவக்கத்தில் சொல்லியபடிக்குள்ள அநேக புராண வாக்கி

யங்களால் ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. அந்த வெங்கடகிரி மகாத்மியம் முதலான நூல்களை விமரிசை செய்தவர்களுக்கு எமது ஆசாரியாள் வாயுபகவானின் அவதாரமென்பதில் சிறிதும் சந்தேகம் ஏற்பட அவகாசமில்லை. ஆகையால் அந்த புராணவசனங்களின்படி ரிக் வேதமந்திரங்களுக்கு வாயு பகவானின் அவதார பரமாய் அர்த்தம் செய்தது யுக்தமே ஆகும். "இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுப பிரம்மயேத்" அதாவது இதிகாஸத்தின்படியும் புராணங்களின்படியும் வேதார்த்தத்தை விவரித்துக் கொள்ளவேண்டுமென்று ஸ்மிருதி ஸ்பஷ்டமாய் சொல்லி இருக்கிறது. ரிக் வேத மந்திரங்களுக்கு வாயு பகவானின் மூன்று அவதாரமான ஹனுமார், பீமசேனர், மத்வாசாரியார் பரமாய் அர்த்தம் செய்யப்பட்டிருக்கும் பிரகாரமும், அது வியாகரணாதிகளுக்கு விரோதமாயில்லாதிருக்கும் தன்மையும் ஸ்ரீமத்வ மந்திரார்த்த மஞ்சரி, ஸ்ரீபகவத்பாதாளின் ஸர்வமூல கிரந்தங்கள் ஸ்ரீஜயதீர்த்தர் செய்த அதன் டீகா கிரந்தங்கள் இவைகளில் சொல்லப்பட்டிருப்பதை ஸங்கிரஹமாய் மற்றொரு ஸந்தர்ப்பத்தில் தனி நிரூபத்தில் காட்டப்படும். புராணங்கள் என்பது வேதத்திற்கு உப பிரம்மணங்கள் என்பதை நாமிருவரும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆகையால் அதன்படி வேதங்களுக்கு அர்த்தம் நிச்சயிக்கவேண்டியதவசியம். ஆதலால்தான் பாதராயணரான ஸ்ரீவேதவியாஸர் பிரம்மமீமாம்ஸா சாஸ்திரமாகிய தான் இயற்றியிருக்கும் பிரம்மஸூத்திரங்களில், வேதங்களின் அர்த்தத்தை நிர்ணயிக்கும் ஸூத்ரங்களைச் சொல்லிவிட்டு, அந்த அர்த்தத்திற்கு ஆதாரமாய் புராணவசனங்கள் இருக்கிறதென்று காட்ட, இடைஇடையே ஓம் ஸ்மிருதேஸ்ச, ஓம் அபிஸ்மர்யதே என்று கூறியுள்ளார். இப்படி இருக்க எமது ஆசாரியாள் சொன்ன வார்த்தைகள் அவருடைய மனதில் மட்டில் இருந்து வருபவைகள் என்று நீங்கள் சொன்னது நீங்கள் உலகமறியாத கிணற்று தவளைகளைபோலிருந்து அவைகளை அறியாதவர் என்பதை நன்கு விளக்குகிறது. இதனால் எமது மதத்திற்கு ஆதாரமாய் எமது ஆசாரியாளுடைய மனதுக்கு மட்டில் தெரிந்ததாயுள்ள வாக்யங்கள்தான் பிரமாணமாயிருக்கின்றன



வென்று நீங்கள் சொன்ன தூஷணைகளும் சரியல்லவென்பது நன்குவற்படுகிறது.

பிரசித்தமான நியாயங்கள் எமது மதத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று நீங்கள் ஓர் தூஷணை சொல்லியிருக்கிறீர்கள். எமது ஆசாரியாள் சொன்ன நியாயங்கள்தான் மிக்க திடமானவை. இதராள் சொன்னது எந்த கக்ஷிக்கும் சிறிதும் நிலை நிற்பதில்லை. மீமாம்ஸா சாஸ்திரத்தின் கௌரவமும் எமது மதத்தில்தான் இருந்துவருகிறது. இதைக்குறித்து நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை. இந்த விஷயத்தை ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகள் தமது தாத்பரிய சந்திரிகை என்று நூலில் நன்கு விளக்கியிருக்கிறார். பூர்வமீமாம்ஸையில் சொன்ன எல்லா நியாயங்களையும் வேதாந்திகளாகிய நாம் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று என்ன நியமம். நாம் மீமாம்ஸிகளுக்கு கிங்கரர்கள் அல்ல.

(தொடரும்.)

---

## முக்ய மாத்வ மடாதிபதிகள்
### நேரில் சந்தித்தல்.

---

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு மடாதிபதிகள் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவின்றி நேரில் சந்தித்துக்கொள்வதும் பாடப்ரவசனம் செய்துகொள்வதும், ஒருங்கே சேர்ந்து பூஜாதிகளைச் செய்து பிக்ஷை பெற்று சிஷ்யகோடிகளுக்கு திவ்விய காக்ஷியளிப்பதுமான வழக்கம் இருந்ததுபோல், தற்போது அந்த ஸம்பிரதாயம் மீண்டும் நடைபெறலாகுமென சந்தேகிக்க இடமிருக்கிறது. பல்லாரி ஜில்லாவிலுள்ள கிண்ணாளமென்னும் கிராமத்தில் ஸ்ரீஉத்திராதிமடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீஸத்யத்யானதீர்த்தஸ்வாமிகள் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்திற்கு தங்கியிருக்கையில், மந்திராலயத்தில் ஸங்கல்பத்திற்கு உட்காரவிருந்து அவஸரமாய் சஞ்சாரகிரமத்தில் அவ்வூர் சமீபத்திலுள்ள கொப்பளம் என்னும் கிராமத்திற்கு விஜயம் செய்திருந்த ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடாதிபதி ஸ்ரீஸுயமீந்திரதீர்த்தஸ்வாமிகள் அவ்வூரில் சில நாள் தங்கியிருக்கவும், ஸ்ரீகுருராகவேந்திரஸ்வாமிகளின் ஓர் அதிசய அனுக்ரஹத்தால் இவ்விரு ஸ்வாமிகளும் நேரில் சந்திக்க சம்மதித்து, ஸ்ரீஉத்தராதி ஸ்வாமிகள்

ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடாதிபதியை தம்முடன் கிண்ணளம் கிராமத்தில் தம் செலவில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் உட்கார அழைக்கவும், உலகம் போற்றும்படியான இவ்விரு மடாதிபதிகளின் சந்திப்பு நீடூழி நின்றிருக்க இது ஓர் மஹத் ஸந்நிதானத்தில் நடைபெறவேண்டுமென்றும் அதற்காக நவராத்திரியில் ஸ்ரீராகவேந்திரஸ்வாமியை தரிசிக்க ஸ்ரீஉத்திராதி ஸ்வாமிகள் மந்திராலயத்திற்கு விஜயம் செய்யவேண்டுமென்றும், தாம் ஏராளமாகச் செலவழித்து ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளை வரவேற்கத் தயாராயிருப்பதாயும், ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடாதிபதி ஸ்ரீஸுயமீந்திர தீர்த்தர் சொல்லியனுப்ப, அதற்கு ஸ்ரீஉத்தராதி ஸ்வாமிகள் சம்மதித்திருப்பதால், மந்திராலயத்தில் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சன்னிதானத்திலாவது, பம்பாக்ஷேத்திரத்தில் ஸ்ரீபத்மநாபதீர்த்தர்முதலிய மஹான்களின் நவ பிருந்தாவனங்களின் ஸன்னிதானத்திலாவது, அல்லது வேறு ராஜஸ்தானத்திலாவது, சமீபத்தில் இவ்விருவர்களின் சந்திப்பு நடைபெறப்போவதாயும், நம்பத்தகுந்த இடத்திலிருந்து பலமான வதந்தி வந்திருப்பதுடன் பலதேசபாஷை பத்திரிகைகளிலும் இச்செய்தி வெளியாயிருப்பதையும் காண மிகவும் மகிழ்கிறோம். இவ்வாறு இம்மடாதிபதிகள் நேரில் சந்தித்து தம்தம் அபிப்பிராய பேதங்களைப்பற்றி தாராளமாய் பேசி, ஒருவாறு முடிவுக்குவந்து கக்ஷிகளை விட்டொழித்து, எல்லா மாத்வர்களும் ஸ்ரீமத்வமதத்தின் ஞானம் பெற்று ஸத்ஸம்பிரதாயங்களை அனுஷ்டிக்கும்படியாய் அவர்களுக்கு உபதேசாதிகளைச் செய்து ஸத்கதியை அடையச் செய்யும்படியாய் பாடுபடுமாறு நாம் ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றோம். தற்போது எமது சமூகத்தின் பெரிய மடாதிபதிகளிலுள்ள சண்டையும் குழப்பமும் எமது சமூகத்திற்கே மானக்கேடாயிருக்கிறதென்பதை நாம் வாய்க்கூசாமலேயே சொல்லவேண்டியிருக்கிறது. இதற்கு காரணம் யாரென்பதை ஆராயப் பிரவேசிக்காமல், தியாகபுத்தியும் தாராள நோக்கமும் கூடிகொண்டு ஸர்வஸங்க பரித்யாகம் செய்து ஸன்யாஸிகளாய்ப்போன இவ்விருவர்கள்தான் சிஷ்யகோடிகளை உத்தரிப்பதாயுள்ள மேலான காரியத்தில் திருஷ்டிவைத்து, ஓர் கௌணபக்ஷத்தையாவது அவலம்பித்தல் அவசியமாகும். சிலவருஷங்களுக்கு முன்பு இப்பத்திராதிபர் இவ்விரு மடாதிபதிகளுடன் இது சம்பந்தமாய் ஏகாந்தத்தில் பேசியதில், சில சில்லரை ஸ்வாதந்திரியங்களை ஒருவருக்காக மற்றொருவர் விட்டுக்கொடுக்கத் தயாராயிருப்பதாயும், ஓர் பிரபலமான பிரசினை மட்டில் விட்டுக்கொடுப்பது அஸாத்யமென்றும் தோன்றியது. அதாவது ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடத்தின் சிஷ்யர்களாயுள்ள மகா தனவந்தர்களான ஸன்யாஸிகளென்னும் மத்ஸ்ய



பிராம்மண மாத்வ வகுப்பார்களுடன் அம்மடாதிபதிகள் இப்பால் ஸமபந்தி போஜனம் செய்வதை நிறுத்திக்கொள்ளவேண்டுமென்றும், அவர்கள் பிராம்மணரல்லாதாரென டிஸ்டிரிக்ட் கெஜட் முதலிய ராஜாங்க தஸ்தாவேஜுகளாலேயே தெரியவருகிறதென்றும், ப்ராசினர்களான ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடாதிபதிகள் ஸமபந்தி போஜனம் கொடுத்துவரவில்லை என்றும் ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் சொல்லவும், அச்சமயம் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிமடம் பீடாதிபதியாயிருந்த ஸ்ரீஸுவ்ரதீந்திர தீர்த்தஸ்வாமிகள் ஸமபந்தி போஜனம் அவர்களுக்கு அளிக்கும் வழக்கம் அநேக ஸ்வாமிகள் காலமாய் நடைபெற்றுவருவதாயும், அதற்கு தங்களிடம் தகுந்த ஆதாரங்களிருப்பதாயும் பதில் சொல்லவும், இந்த ஸம்பிரதாயம் தொன்றுதொட்டுவந்ததா அல்லது வெகு சமீபத்தில் மூன்று நான்கு ஸ்வாமிகள் காலம் முதற்கொண்டு வந்ததா என்பதை கிறிஸ்துவர்கள், மகம்மதியர்கள் சைவர்கள் முதலான இதர மதத்தினர்களான பொது உத்யோகஸ்தர்களைக்கொண்ட ஓர் கமிட்டியின் தீர்மானத்தைப்பார்த்தால் இந்த கலகம் தீருமல்லவா என்று மத்யஸ்தம்பேசியதற்கு ஸ்ரீஉத்தராதிஸ்வாமிகள் தம் சம்மதத்தை அறிவிக்க, ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடாதிபதிகள் தம் சிஷ்யர்கள் இந்த ஏற்பாட்டை ஒப்புக்கொள்வார்களோ மாட்டார்களோ என்ற சந்தேகம் தமக்கு இருப்பதாய்ச் சொல்லிவிட்டதால் அச்சமயம் நடக்கவிருந்த சமாதானம் நடைபெறாமல் நின்றுபோய்விட்டது. தற்போது பகவத் அனுக்ரஹத்தால் அந்த பிரசினை ஒருவாறு முடிவுக்கு வந்திருக்கும்பக்ஷத்தில் இவ்விருஸ்வாமிகளும் ஒருங்கே சேருவதும் எல்லா மடத்து சிஷ்யர்களாலும் எல்லா மடாதிபதிகளும் பூஜைபெறுவதும் அஸாத்யமில்லை என்றே நிச்சயிக்கலாம்.

## ஸ்ரீ வியாஸராஜமடம் ஸ்வாமிகளின் ஆசிரமம்.

மைசூர் ஸமஸ்தானத்தைச்சேர்ந்த ஸோசலே ஸ்ரீ வியாஸராஜ மடத்தின் ஸம்ஸ்தானாதிபதியாகிய ஸ்ரீ வித்யாவாரிதி தீர்த்தஸ்வாமிகள் தற்காலம் அசக்தராயிருப்பதைக்கொண்டு, தமக்குப் பின் ஸமஸ்தானாதிபதியாயிருக்கவும் அம்மடத்து ஸ்ரீ கோபாலகிருஷ்ணர் முதலிய விக்ரஹங்களைப் பூஜிக்கவும் தமக்கு

வார்சாக, தம குருவான இந்த ஸம்ஸ்தான பீடாதிபதியாய் இருந்த ஸ்ரீ வித்யாரத்னாகரதீர்த்தரின் பூர்வாசிரமத்து குமாரராய் மைசூரில் வக்கீலாயிருந்துவரும் ஸ்ரீமான் T. V. நரசிம்மாசாரியார் பி. ஏ., பி. எல்., அவர்களுக்கு இந்த அக்டோபர்மீ 4உயன்று ஸன்யாஸம் தந்தாரென்றும், அதற்குமுன் மைசூர் வக்கீல்களின் சங்கத்தாரால் அவருக்கு உபசரணைகள் நடத்தப்பட்டதென்றும், இந்த ஸ்ரீமான் T. V. நரஸிம்மாசாரியார் பெங்களூர் ஸெண்ட்ரல் காலேஜில் 1923வது வருஷத்தில் பி. ஏ., பரீக்ஷையிலும், 1925வது வருஷத்தில் பி. எல்., பரீக்ஷையிலும் தேறி கௌரவ பட்டம் பெற்றவரென்றும், தற்போது இவருக்கு சுமார் 35 வருஷமென்றும், அவருடைய தந்தையான மஹாவித்வான் ஸ்ரீ வித்யாரத்னாகரதீர்த்தர் முதலான பண்டிதர்களிடம் சாஸ்திராப்யாஸம் செய்தவரென்றும், எமது நண்பர் பெங்களூர் ஜர்னலிஸ்ட் ஸ்ரீமான் V. S. சஞ்சீவ ராவ் எழுதுகிறார்.

---

## சந்தாதாரர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

இம் மாத்வமித்திரனை சரியானபடி அச்சிட்டு வெளியாக்குவதில் இதன் ஆசிரியருக்கு இவ்வெட்டு வருஷ காலமாய் இல்லாத மிக்க பலிஷ்டமான கோரப்ரதிபந்தங்கள் அடுத்தடுத்து ப்ரதிமாதமும் இப்பால் ஏற்பட்டு வருவதாய் மிக்க வருத்தத்துடன் அறிவிக்க வேண்டியிருக்கிறது. எமக்கு கிடைக்கும் தினசரி தபால்களை கூட பார்க்கமுடியாமல் போயிருக்கிறது. அந்த ப்ரதிபந்தங்களின் பூரா விவரத்தை பகிரங்கமாய் பத்திரிகையில் பிரசுரிக்க முடியாதிருப்பதைக்கொண்டு சந்தாதார நேயர்களுக்கு உண்மையான நிலையை அறிவிக்க கூடாமலிருக்கும் சந்தர்பம் ஏற்பட்டிருக்கிறது. இம்மித்திரனுக்குப் போதுமான திரவியபலம் இருக்கும் பக்ஷத்தில் ஒருவாறு இந்தநிலையை சீர்திருத்திக்கொள்ளலாமென்று எண்ணவோ அந்த திரவியபலமும் மிகவும் குன்றிப் போய்விட்டது. பிரதி வருஷமும் நாம் எவ்வளவு அழுத்தமாய் விக்ஞாபனம் செய்துகொண்டும், உண்மையான சங்கடநிலைமையை அறிவித்தும், அவை



எதுவும் பலிக்காமல்போய் இப்பால் இம்மித்திரனுக்கு சந்தா பலம் வருஷா வருஷம் குறைந்துபோய் வந்துகொண்டிருந்ததுடன் இந்த எட்டாவது வாலியத்திற்கு தற்காலம் அது மிகக்கேவலமாய் இருந்து வருகிறது. இந்த நிலை மாறாமல் திரவியானுகூல்யம் ஏற்படாமலிருக்கும்பக்ஷத்தில் இதுவரை வெளிவந்ததுபோல் இம்மித்திரன் சரியானபடி வெளியாகுமென்று சொல்ல எமக்கு தைரியமில்லை. இம்மித்திரனை வெளியாக்கக் காரணமாயிருந்த ஸ்ரீகுரு ராகவேந்திரரின் பேரருள் துணையாயிருப்பதால் தான் இம்மித்திரன் இவ்வளவு இடைஞ்சல்களின் இடையே ஒருவாறு வெளியாகி வருகிறதென்று நம்மவர்கள் கவனிக்க வேண்டியதவசியமாகும். இப்பேர்ப்பட்ட நெருக்கடியான நிலைமையில் எமது மித்திரனில் அளவிலா அன்பு கொண்டிருக்கும் எமது சந்தாதாரநேயர்கள் ஸ்ரீ பகவத் பாதாளுடையவும் மாத்வ சமூகத்தினுடையவும் சேவை என்று எண்ணி தங்களால் இயன்ற அளவு சந்தாதாரர்களை சேர்த்துவைத்து அவரவர்களின் சந்தா துகைகளை அனுப்பி மாத்வமித்திரனை சரியானபடி நடைபெறச் செய்யப்ப்ரார்த்திக்கிறோம்.

---

### மாத்வமித்திரன் பழைய வாலியங்களின்

## தவணைவிலைச் சீட்டு.

நாம் எதிர்பார்த்தபடி இந்த சீட்டிற்கு சந்தாதாரர்கள் சேரவில்லையாதலால் இது சம்பந்தமாய் வெளியூரில் பிரசாரம் செய்ய போதுமான ஸாவகாசம் எடுத்துக்கொள்ள, இன்னமும் 2 மாதத்திற்கு அதாவது புஷ்ய அமாவாசை வரையில் இதன் சீட்டு குலுக்கும் காலம் ஒத்திப்போடப்பட்டிருக்கிறது. தற்போது சந்தாதாரராய்ச் சேர்ந்தவர்கள் தங்கள் அடுத்தமாதத்திய சந்தாவை அவர்களின் சீட்டு குலுக்கப்பட்டு ப்ரைஸ் வெளியானபின் அனுப்பலாம். தற்போது சந்தா துகை அனுப்பியவர்களுக்கு மணியார்டர் ரசீது வௌச்சராக இருப்பதால் தனி ரசீது அனுப்பப்படுவதில்லை.

[பத்திராதிபர்.]

---

# த்வைத ஸித்தாந்தத்தின்படி ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தத்தின்

# அத்யாத்ம குறிப்பு.

வஸுதேவன் என்னும் பெயர்கொண்ட சுத்த ஸத்வகுணத்தின் ஸம்பந்தத்தால் தேவகி என்னும் பெயர்கொண்ட பகவத் விஷயகமான மனோ விருத்தியில், அக்ஞ ஜனங்களுக்கு பாதிராத்திரியாக இருக்கும் அஸம்பிரக்ஞாத ஸமாதிகாலத்தில், ஸ்ரீகிருஷ்ணராகிய பரப்ரம்மத்தின் ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டது. அதற்கு முன் யோக ரூபமாகிய பலராமரின் ப்ராதுர்பாவம் ஏற்பட்டது. நந்தகோபன் ஸந்தோஷமும் யசோதை முதிதா சித்தவிருத்தியுமாவார்கள். துர்க்கை அவித்யை, பஹிர்முகமான அதாவது வெளிப்புறமான புத்தி. பூதனை என்பவள், சகடாஸுரன் லிங்கசரீரம். சுழல்காற்றுயுள்ள திருணாவர்த்தாஸுரன் ஆசை. இவைகள் ப்ரம்மப்ராப்திக்குமுன் விலகுகின்றன. ப்ரேமையாகிய கயிற்றால், அந்தரங்கமாகிய உரலில் கட்டப்பட்டவராய் பகவான் யமளார்ஜுனர்களாகிய அக்ஞானம் விபரீதக்ஞானம் இவைகளை நாசம் செய்தார். வத்ஸாஸுரன் அவிவேகம். பகாஸுரன் தம்பம். இவைகளும் அழிந்துபோயின. யமுனையாகிய தாமஸ மனோ விருத்தியில் காளிய ஸர்ப்பமென்னும் அகங்காரம் இருந்தது. ஸ்ரீ கிருஷ்ணர் ஹிருதயமாகிய மடுவை ப்ரவேசித்து, அவனை அந்த ஸ்தானத்தினின்றும் அப்புறப்படுத்தினார். காட்டுத்தீ ஆதி பௌதிகமான தாபம். மழை என்பது ஆதிதைவகமான தாபம். இவைகளும் ப்ரம்ம ஸாக்ஷாத்காரத்தால் நீங்கின. பசுக்கள் இந்திரியங்களாகின்றன. கோபிஜனங்கள் அந்தக்கரணத்தின் விருத்திகள். இவைகள் பகவத்பரமாய் ஆனப்ரகாரம் ராஸக்ரீடை முதலியவை. கோபிகள் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்க்காமலிருந்ததென்பது பகவானை மறந்ததாகும். அரசு, பொரசு, ஆலமரங்கள் மூன்று குணங்கள். குரவகமாகிய மருதாணி முதலியவைகள் பஞ்ச பூதங்கள். துளஸி முதலியவைகள் பஞ்ச க்ஞானேந்திரியங்கள். சூதமாகிய மாமரம் முதலியவைகள் பஞ்ச கர்மேந்திரியங்கள்; எலந்தை முதலியவைகள் பஞ்ச ப்ராணங்கள். கதம்பம் நீபமாகிய மகிழம் கடப்பம் என்னும் மரங்கள் சித்தமும் அகங்காரமுமாவார்கள். பூமி மனஸ்ஸு, பெண் மான் புத்தி என்று சொல்லவேண்டும். இவைகளை ஸ்ரீகிருஷ்ணரைப்பற்றி கோபிகள் விசாரித்தனர்



என்பது வனகீதையின் தாத்பரியம். அரிஷ்டாஸுரன் நூரதிருஷ்டி, கேசி மனஸ்ஸின் மகாவேகம். சக்கருடன் யோகத்திற்கு விக்னம். இவர்கள் கம்ஸனாகிய அக்ஞானத்தை அண்டியவர்கள். அக்ரூரன் ஸச்சாஸ்திரம். கம்ஸனுடைய வண்ணான் ரஜோகுணம் மதுரையில் மாலை போட்டவன் ஸத்வகுணம். மூன்று குணங்களால் வக்ரமானவள் த்ரிவக்ரை. ஸாங்கேதிக போகத்தின் உத்ஸவம் தான் தனுர்யாகம். குவலயாபீடமென்னும் யானை மகாமதம். மதமும் மானமுமென்பது அதன் தந்தங்கள். சாணூரன் முஷ்டிகன் என்னும் மல்லர்கள் ப்ரமாதமும் மோகமுமாவார்கள். கம்ஸன் மகாமோகம். ஜராஸந்தன் விபரீத ஆக்கிரஹம். அஸ்தி ப்ராஸ்தி என்னும் கம்ஸனுடைய பத்னிமார்கள் அக்ஞானமும் அன்யதாக்ஞானமுமாவார்கள். பீமசேனர் ஸத் ஆக்ரஹம். த்வாரகாபட்டணம் லிங்கதேக நிவிருத்திக்குப் பின்னிட்டுள்ள ஸ்வரூபஸ்திதி.

---

# த்வைத ஸித்தாந்தத்தின்படி ஸ்ரீமத் ராமாயணத்தின்

# அத்யாத்ம குறிப்பு.

தசரதர் தசேந்திரியங்களாலும் பகவானை அடையும் ஸாதனங்களைச் செய்பவர். அவருடைய அநேக பத்னிமார்கள் என்றால் அவருடைய பலமனோவிருத்திகள். அவருக்கு ராமர் முதலான குமாரர்கள் என்றால் அவருக்கு மோக்ஷாதி புருஷார்த்தங்கள் உண்டாயினவென்று பொருள். அல்லது ஞானம், வைராக்கியம், பக்தி யோகம் என்கிறவைகள் உண்டானதாய்ச் சொல்லலாம். விச்வாமித்திரர் என்பவர் காயத்ரி மந்திரத்தின் த்ரஷ்டா அதாவது அந்த காயத்ரி மந்திரத்தைப் பார்த்தவர். அவர் செய்த யக்ஞமாவது ஆத்ம ஸமாதானம். தாடகை என்பவள் விபரீத விருத்தி. மாரீசன் ஸுபாஹு லயமும் விக்ஷேபமும் ஆவார்கள். அவர்களுடன் இருந்த ராக்ஷஸர்கள் யோகத்திற்கு ப்ரதி பந்தகங்களான மதம் மானாதிகள். ஸ்ரீ ராமர் க்ஞானம். காயத்ரியை எப்பவும் ஜபிப்பவர் க்ஞானத்தை அடையப்பெற்றார் என்றும் அதற்குப்ரதிபந்தகங்களாயுள்ள விபரீதவிருத்தி லயம் விக்ஷேபம் மதம் மானம் முதலியவைகளை அந்த க்ஞானம் போக்கியதென்றும் ஏற்படுகிறது.

ஜனகன் ஸத்விருத்தியைக் கொண்டவன். அஹல்யை பஹிர்விரு
த்தி. தனுஸ் என்பது விஷயத்தின் ஆசை. அதை முறித்து ப்ரம்ம
ஸாக்ஷாத்காரத்திற்கு உபயோகமாயுள்ள சித்த விருத்தியாகிய
ஸீதை அடையப்பட்டாள்; பரசுராமர் ஸமாதிக்கு ஏற்பட்ட அவாந்
தரமான பலன். க்ஞான ரூபியான ஸ்ரீராமர் ஆசையற்று அவரை
ஜயித்தார். க்ஞானம் வைராக்யம் இவைகளும் பக்தியும் யோகமும்
இவைகளும் எப்பொழுதும் சேர்ந்திருக்குமென்பது இவ்விருவர்
களின் யுத்தம் அறிவிக்கிறது. கைகேயியின் மனோ விருத்தியைக்
கெடுத்த கூனி தோஷமான மனோவிருத்தி. ராஜ்யம் என்பது
க்ஞானத்தின் மேலான ஸ்தானம். ராக்ஷஸர்கள் அந்த க்ஞானத்
திற்கு தடை செய்பவர்கள். மாயாமிருகம் அதாவது மாரீசனை
தங்கமான் விஷயத்திலுள்ள பேராசை. ரிஷ்யமூக பர்வதம்
சாந்தி தாந்தி முதலியவைகள். வாலி சுக்ரீவர்கள் கர்ம காண்
டம் க்ஞான காண்டமும் ஆவார்கள்; கர்மகாண்டத்தை விட
க்ஞான காண்டம் க்ஞானத்திற்கு பிரியமானதாகும். ஹனுமார்
க்ஞானத்தை உபதேசிக்கும் குரு; ஸம்பாதி யோகதிருஷ்டியா
வான்; ஜடாயுஸ் தபஸ் ஆவான். ராவணன் அக்ஞானமாவான்
சீதையாகிய பிரம்ம விஷயகமான புத்தியை களவாடினான், பதி
னாலாயிரம் ரக்ஷஸர்கள் என்பார்கள், இந்திரியங்கள் 10 மனஸ் 1
புத்தி 1 அஹங்காரம் 1 சித்தம் 1 ஆக பதினான்கு வஸ்துக்களின்
ஆயிரக்கணக்கான விருத்திகள். இவைகளை ஞானமாகிய ராமர்
நிக்ரஹம் செய்தார். ஸமுத்ரம் ஸம்ஸாரமாகும், ராவணனுடைய
ஸ்திரீ ஜனங்கள் ராஜஸம் தாமஸம் ஸ்வபாவங்களான விருத்திகள்,
லங்கை என்பது மாயை, விபீஷணன் ஸத்வ ஸ்வபாவம், கும்ப
கர்ணன் தமஸ்வபாவம், ராவணன் ரஜஸ்வபாவம், விஷய ஸமுத்
ரத்தை ஜயிப்பது காமானுஸாரமாய் முடியாது என்று காட்ட
அதை க்ரோதத்தால் ஞானியாகிய ராமர் ஜயித்தார், இந்திரஜித்
ராகம் ஆகிய ஆசை, யுத்தபூமியில் வந்த கருடன் ப்ரணவத்தின்
அர்த்தத்தின் அறிவு, தூம்ராக்ஷன் முதலிய மந்திரிமார்கள் தசேந்
திரியங்களின் கர்மத்தில் ஆக்ரஹங்கள், மனோ விருத்திலயமாகிய
கும்பகர்ணனுடைய நாசம் ப்ரபோத ரூபியாகிய ராமனால் ஏற்பட்
டது, கந்தமாதன பர்வதம் என்பது யோக சாஸ்திரம், ராவண



னுடைய ரதம் அஸுர ஸம்பத். ராமருடைய ரதம் தெய்வஸம்பத்.
ஸ்ரீ ராமருடைய பட்டாபிஷேகம் க்ஞானத்திற்கு ஆனந்த ரூபத்
தால் நிலை.

இந்தக் குறிப்பின்படி ஸ்ரீமத் ராமாயணத்தின் அந்தந்த சம்
பவங்களை அத்யாத்ம பரமாய் அர்த்தம் செய்துகொள்ளலாம்.

---

# சங்கியை விபரம்.

ஏக தச சத ஸஹஸ்ராயுத லக்ஷப்ரயுத கோடய: க்ரமச:1
அர்புதமப்ஜம் கர்வ நிகர்வ மகாபத்ம சங்கவஸ்தஸ்மாத்11
ஜலதிஸ்சாந்த்யம்மத்யம்பரார்த்தமிதிதசகுணோத்தராஸ்ஸம்க்ஞா:
ஸங்க்யாயா: ஸ்தானானாம் வ்யவஹாரார்த்தம் க்ருதாபூர்வை:11

| | | |
|---|---|---|
| ஏகம் | ஒன்று | 1 |
| தசம் | பத்து | 10 |
| சதம் | நூறு | 100 |
| ஸஹஸ்ரம் | ஆயிரம் | 1,000 |
| அயுதம் | பதினாயிரம் | 10,000 |
| லக்ஷம் | லக்ஷம் | 100,000 |
| ப்ரயுதம் | பத்துலக்ஷம் | 1,000,000 |
| கோடி | கோடி | 10,000,000 |
| அர்புதம் | பத்துகோடி | 100,000,000 |
| பத்மம் | நூறுகோடி | 1,000,000,000 |
| கர்வம் | ஆயிரம்கோடி | 10,000,000,000 |
| நிகர்வம் | பதினாயிரம்கோடி | 100,000,000,000 |
| மகாபத்மம் | லக்ஷகோடி | 1,000,000,000,000 |
| சங்கு | பத்துலக்ஷகோடி | 10,000,000,000,000 |
| சமுத்ரம் | கோடிகோடி | 100,000,000,000,000 |
| அந்த்யம் | பத்துகோடிகோடி | 1,000,000,000,000,000 |
| மத்யம் | நூறுகோடிகோடி | 10,000,000,000 000,000 |
| பரார்த்தம் | ஆயிரம்கோடிகோடி | 100,000,000,000,000,000 |

குறிப்பு:— பீமசேனர் கந்தமாதனமலையில் பஞ்சவர்ணத் தாமரை
யைக் கொணரப்போயிருக்கையில் குபேர ஸகாவான மணிமானைக்

கொன்றபொழுது, அந்த மணிமானுக்கு ஸகாயமாயிருந்த மூன்று மகாபத்மம் ராக்ஷஸர்களை அவர் கொன்றூர் என்றால், மூன்று லக்ஷ கோடி 3,000,000,000,000 ராக்ஷஸர்களை பீமசேனர் கொன்றிருப்பதாய் அறியவேண்டியதாகும். அதற்குமுன் ஸௌகந்திகத் தாமரையைக் கொணரும்பொழுது அவர் நூறுகோடி 1,000,000,000 க்ரோதவசர்களென்னும் ராக்ஷஸர்களுடன் யுத்தம்செய்து அவர்களில் ஒரு லக்ஷம் 100,000 ராக்ஷஸர்களைக்கொன்று மற்றவர்களை தோற்கடித்து குபேரனிடம் விரட்டியிருக்கிறூர். என்று குறிப்பிட வேண்டியதாகும்.

---

## செய்தித்திரட்டு.

---

திருநெல்வேலி மாத்வா அஸோஸியேஷனின் ஆதரவில் 25—4—35ல் ஸ்ரீமான் தோலூர் ராகவேந்திராசாரியார் அவர்களால் சுதர்சன மீமாம்ஸா அல்லது தப்தமுத்ராதாரணம் விஷயமும், 2-5-35ல் முலுபாகலு மடாதிபதி ஸ்ரீப்ரேக்ஷாநிதிதீர்த்தஸ்வாமிகள் அவர்களால் வைஷ்ணவ தர்ம விஷயமும் 13—5—35உயன்று ஸ்ரீமான் கோலார் ஆனந்தராவ் அவர்களால் அநந்தசயனமாகாத்மியமும், 21—7—35உயன்று சப்ஜட்ஜ் ஸ்ரீமான் K. பாலாஜி ராவ் அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் ஸ்ரீமான் கெலகி யதுநாதாசாரியார் அவர்களால் ஸ்ரீஜயதீர்த்தரின் சரித்திரமும், உபதேசமும் என்னும் விஷயமும், 30—8—35உயன்று ஸ்ரீமான் பெங்களூர் கிருஷ்ணபாகவதர் அவர்களால் ஸ்ரீராமநாம ப்ரபாவம் என்னும் ஹரிகதையும் நடைபெற்றதாய் அதன் காரியதரிசி ஸ்ரீமான் வக்கீல் நரசிம்மராவ் எழுதுகிறூர்.

மதுரை ப்ரம்மவித்யாச்ரம சபையின் ஆதரவில் 21—9—35உயன்று ஷை சபையின் கௌன்ஸில் மெம்பர் ஸ்ரீமான் C. R. ராம அய்யர் அவர்களால் ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகளாலியற்றப்பட்ட ஸிவில் ஸூட் என்னும் நூலின் அரிய விஷயங்களும் 5—10—35உயன்று காரியதரிசி ஸ்ரீமான் ரமணு அ. ராமகிருஷ்ணுசாரியாரால் வைதிக ஆஸ்திக மதம் என்னும் விஷயமும் உபன்யஸிக்கப்பட்டதென்றும், 7—10—35உ விஜயதசமியன்று ஸ்ரீமத்வஜயந்தி இனிது கொண்டாடப்பட்டதென்றும் அன்று ஸ்ரீபகவத்பாதாளின் படத்திற்கு அலங்காரம் அர்ச்சனை முதலியவைகள செய்யப்பட்டதுடன் ஸ்ரீமான் ரமணு அ. ராமகிருஷ்ணுசாரியாரால் ஸ்ரீமத்வ விஜயமும் த்வைத ஸித்தாந்தமும், என்பதைப்பற்றி உபன்யஸிக்கப்பட்டதென்றும், உபன்யாசத்தின் முடிவில் அச்சபையின் பிரஸிடெண்டு பாரிஸ்டர் ஸ்ரீமான் K. L. வெங்கட்டராம் அவர்களால் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு வைதிக



ஆஸ்திக மாத்வரும் மாத்வஸபையினரும் பண விஷயத்தில் பால்யாவஸ்தை அடைந்து கஷ்டப்பட்டு நடத்தப்பட்டுவரும் மாத்வமித்திரன் பத்திரிகையை கூடிய சீக்கிரத்தில் யௌவனவஸ்தையை அடையுமாறு தினே தினே தேவபூஜா காலத்தில் ஸ்ரீநாராயணனை ப்ரார்த்திக்க சபையினரை வற்புறுத்தியதாகவும் அச்சபையின் காரியதரிசி அறிவிக்கிறூர்.

---

## ஸத்ரயாகம்.

"மாருதி தாஸ்" எனப் புனைபெயர்பூண்ட ஓர் மாத்வ ப்ரபுவின் பெரு முயற்சியின்பேரில் பூர்வம் விராட நகரமாயிருந்த கோயமுத்தூர் ஜில்லா பெரிய தாராபுரத்தில் ஸ்ரீ ஆஞ்ஜனேயரின் சன்னதியில் ஸத்ரயாகம் என்னும் மஹத் காரியம் நடத்தப்படுவதாயும், அச்சமயம் வித்வத்சபைகள் வாக்யார்த்த விசாரங்கள் உபன்யாஸங்கள் ஹரிகதைகள் வேதபாராயணங்கள் ஸ்ரீ பகவத்பாதாளின் ஸர்வமூலகிரந்த பாராயணங்கள் ஸச்சாஸ்திர படனங்கள் முதலியவைகள் நடத்தப்படுமென்றும், கும்பகோணம் ஸ்ரீமவே, கா. பே. ராகவேந்திராசாரியார் அவர்களால் உத்தமரீதியில் அபூர்வமானதாய் 23 பசுக்களைக்கொண்ட வாஜபேயம் என்னும் உத்தமயாகம் வெகு விமரிசையாய் செய்யப்படுகிறதென்றும், பெருவாரியாய் பிராம்மண போஜனமும் நடைபெறப்போகிறதென்றும், இதற்காக நாடெங்குமுள்ள முக்யஸ்தர்களாயுள்ள வித்வான்கள் ஆசாரியர்கள் மடாதிபதிகள் முதலியோருக்கு அழைப்புப் பத்திரிகைகள் அனுப்பட ஏற்பாடாயிருக்கிறதென்றும், ஏராளமான ஜனக்கூட்டம் எதிர்பார்க்கப்படுகிறதென்றும் இந்த யாகம் கார்த்திகமாஸம் அமாவாசை முதல் சுமார் 10 நாட்கள் நடைபெறப்போகிறதென்றும் எமக்கு செய்தி சொல்லியனுப்பப்பட்டிருக்கிறது.

## மதிப்புரை.

### ஸம்ஸ்கிருத தமிழ் டிக்ஷனரி.

---

பிரம்ம ஸாயுஜ்ய லைப்ரெரியின் 4வது பிரசுரங்களில் நான்காவதான ஸம்ஸ்கிருத தமிழ்டிக்ஷனரியின் இணையற்ற சௌகரியத்தை யாவரும் மறுக்கமுடியாது. இது தேவநாகர லிபியில் பகவத்கீதை உபநிஷத்துகள் ஸந்தியா மந்திரங்கள் வேதவாக்யங்கள் முதலியவைகளிலிருந்து அநேக உதாஹரணங்களுடன் பள்ளிக்கூடம்

மாணவர்களின் உபயோகத்திற்காகவென்று வெகு சிலாக்யமான ரீதியில் உத்தமமான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது சுமார் 10,000 ஸம்ஸ்கிருத பதங்களுக்கு குறையாமல் அகராதி கிரமத்தில் தேவநாகர லிபியில் ஸம்ஸ்கிருத பதங்களும் அவைகளின் இலக்கணக்குறிப்பும் அவைகளுக்கு நன்றாய் மனதில்பதியும்படியாயுள்ள உலக வழக்கத்தில் வந்திருக்கும் தமிழ் அர்த்தமும் காட்டப்பட்டிருப்பது மெச்சத் தகுந்ததாயிருக்கிறது. இவ்வகராதியிலுள்ள அர்த்தங்களை சரியானபடி தெரிந்துகொண்டால் எந்த ஸம்ஸ்கிருத நூல்களின் அர்த்தங்களையும் ஸுலபமாய் தெரிந்துகொள்ள சௌகரியமாயிருக்குமென்பதில் ஆக்ஷேபணையில்லை. ஸ்ரீமான் உபய. வே. நேமம், ஈ. வெங்கடேச சர்மா இதன் ஆசிரியராவார். இவர் செய்த இப்பேருதவிக்கு தமிழ் நாட்டு ஸம்ஸ்கிருத மாணவர்கள் எப்பொழுதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். இப்புத்தகத்தின் விலை ரூ. 2-0-0 என்றும் ஸ்ரீமான் நே. ஈ. துரைசாமி அய்யங்கார், குத்தம்பாக்கம் போஸ்ட், பூந்தமல்லி மார்க்கம், செங்கற்பட்டு ஜில்லா என்னும் விலாசத்திற்கு எழுதினால் இந்நூலை அடையப்பெறலாமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

## விசேஷ தினங்கள்.

### கார்த்திக மாஸம்.

| | | |
|---|---|---|
| 28—10—35 | சோமவாரம் | பலிப்ரதமை |
| 29—10—35 | மங்களவாரம் | ப்ராத்ருத்விதியை |
| 30--10—85 | புதவாரம் | பகினித்ருதியை |
| 4—11—35 | சோமவாரம் | சிரவணம் உப. இல்லை, விஷ்ணு ப. உப. இல்லை |
| 6—11—35 | புதவாரம் | விஜயதாஸர் புண்ணிய தினம். |
| 7—11—35 | குருவாரம் | ஏகாதசி உப. |
| 8—11—35 | சுக்ரவாரம் | உத்தான த்வாதசி, துளஸீ விவாஹம், க்ஷீராப்தி பூஜை, சாதுர்மாஸ்ய ஸம்பூர்த்தி. |
| 9—11—35 | சனிவாரம் | தாத்ரிஹவனம் |
| 10—11--35 | பானுவாரம் | பௌர்ணமி, விஷ்ணு ப. உப. கார்த்திக ஸ்நானம் பூர்த்தி |
| 15—11—35 | சுக்ரவாரம் | தைலாஸ்நானம் பூர்த்தி |
| 21—11—85 | குருவாரம் | ஏகாதசி உப |
| 22—11—35 | சுக்ரவாரம் | த்வாதசி, ஹரிவாஸரம் மணி 8-10க்கு மேல் பாரணை |
| 26—11—35 | சோமவாரம் | அமாவாசை: அசுவத்த ப்ரதக்ஷிணம் |

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:**—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சனாவஸ்தை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

**ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:**— தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

**ஸ்ரீவாயுஸ்துதி:**—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

**துவைதமத விளக்கம்:**—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்:**—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

**துருவசரித்திர நாடகம்:**— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0

**கீதாதத்வம்:**— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இறுமாய் போஸ்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0.

ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலிச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்ப வேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் பொறுப்பாளியல்ல.

**மானேஜர் மாத்வமித்திரன்,** ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ 3

Regd. No M. 2419


# டி. எஸ். ஆர். அண்டு கம்பெனி, கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்திவிலாஸம் “கோகுல்”

## எங்கள் வாஸனாதிரவியசாலையில் தயாரித்து விற்பனைக்கு தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊறுகாய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் திணுசுகள் |
| ஸ்னோப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| பேஸ் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed at Sri Venkateswar Printing Works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbako